திராவிடன்

ஆசிரியர் : என். வி. நடராசன்

மலர் : 8 13-5-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மணி : 40

பெங்களூரில் திருக்குறள் மாநாடு

மே திங்கள் 14, 15-ம் நாட்களில் பெங்களூர் டாங்கர்டவுன் பிளாக்பள்ளி உயர்நிலைப்பள்ளித் திடலில் நடைபெறும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், வழக்கறிஞர் தி. பொ. வேதாச்சலம், பேராசிரியர்கள் மா. இராசமாணிக்கனார், சி. இலக்குவனார், க. அன்பழகன், கன்னடப்பேராசிரியர் எல். குண்டப்பா திருக்குறளார் முனுசாமி எம்.பி, குன்றக்குடி மடாதிபதி, டி. கே. சீனிவாசன் மயிலம் துரைசாமி அய்யர் மற்றும் பலர் கலந்து கொள்வர்,

கலைவாணர் என். எஸ். கே. குழுவினரின் வில்லுப்பாட்டும் ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களின் குறள் ஓவியகாட்சியும் இடம் பெறும்.

கம்யூனிஸ்ட் ஏடும் உண்மைபேசுகிறது!

வாழுது - வாடுது! தேயுது - தேயுது!

வடநாட்டு ஆதிக்கபீடம் தென்னாட்டினை நடத்தும் ஓரவஞ்சனையான சம்பவங்களைத் தி. மு. கழகம் ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டும் போதெல்லாம், தேசிய ஏடுகள் சீறிப் பாய்ந்துவந்த நிலை மாறி இன்று அவ்வேடுகளே அதனை எடுத்துக் கூறுவதும் அல்லது மவுனம் சாதிப்பதுமாக யிருக்கின்றன. ஆனால் கம்யூனிஸ்ட் ஏடாகிய 'ஜனசக்தி' மட்டும் என்ன இது—வடநாடாவது — தென்னாடாவது எல்லாம் வீண்வாதம், குறுகிய மனப்பான்மை என்று தத்துவார்த்தம் பேசிக் கொண்டு வடநாட்டுமுதலாளித்துவத்திற்கு மறைமுகமாக பராக் கொடுத்து வருகிறது. இந்த விவரங்களை நாம் பலமுறை எடுத்துக் காட்டியு மிருக்கிறோம்.

கம்யூனிஸ்டுகளும் அவர்களின் ஏடு 'ஜனசக்தி'யும் வடநாட்டு ஏகாதிபத்யத்திற்கு செய்துவரும் எடுபிடி வேலைகளை எவ்வளவு சாமர்த்தியமாகத்தான் மறைத்து விட்டு அரசியல் வேதாந்தம் பேசினாலும் அவர்களின் குளறுபடியான கொள்கையால் அவர்களையும் அறியாது தங்களின் குட்டை வெளிப்படுத்திக் கொள்வர் என்பதை நாம் அறிவோம். அதற்கேற்பவே 'ஜனசக்தி' 8-5-55-ம் நாள் இதழில் 8-வது பக்கம் தலைப்பில் **வடக்கு வாடுது—தெற்கு தேயுது என்ற தலைப்பில்** ஒரு செய்தியை வெளியிட்டு தனது குளறுபடியை தானே வெட்ட வெளிச்சமாக்கி யிருக்கிறது!

"பம்பாய் துறைமுகத்தில் கப்பல்களில் சாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் 1000 ஆள் தேவை என்று துறைமுக அதிகாரிகள் விளம்பரம் செய்தனர். ஆயிரம் பேர் வேலைக்கு 20 ஆயிரம் பேர் கூடிவிட்டார்கள் ...கும்புகூடி கோஷிப்பதைக் கண்டதும், துறைமுக அதிகாரிகள்பிரண்டு போய் ஆள் எடுப்பதை ஒத்திப் போட்டுவிட்டதாக நோட்டீஸ் போட்டார்கள்......

தென்னாட்டில் தென்பிராந்திய ரயில்வேக்கு 1954-55-ம் வருடத்துக்கு கிளர்க் வேலைக்கும் டிக்கட் கலெக்டர் வேலைக்கும் 1500 பேர் வேண்டுமென்று விளம்பரம் செய்தார்கள். உடனே 129 ஆயிரம் (1லட்சத்து 29 ஆயிரம்) பேர் அப்ளிகேஷன் கொடுத்தார்கள். இது தென்னாட்டில்...

வடக்கே வாழுது தெற்கே தேயுது என்பார்களே காங்கிரஸ் ஆட்சியில்; வடக்கும் வாடுது தெற்கும் தேயுது. விஷயத்தை இப்படிப் பார்க்காமல் எப்படி எப்படியோ பார்த்து திக்கு திசைகளைக் காட்டுவது இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதைத் தானே நிரூபிக்கிறது."

ஜனசக்தி—8-5-55
(8-வது பக்கச் செய்தி)

'ஜனசக்தி' இந்த செய்தியைக் கொடுத்து தனது அபார புள்ளி விவர நிபுணத்துவத்தால் பரந்த கண்ணோட்டத்தால் வடக்கேயும் வாடுது தெற்கேயும் தேய்கிறது என்று ஆராய்ச்சியைக் கண்டு பிடித்திருக்கிறது!

'ஜனசக்தி'யின் புள்ளி விவரப்படியே பார்த்தாலும் வடநாட்டில் ஆயிரம் பேருக்கான வேலைக்கு இருபதினாயிரம் பேர் அப்ளிகேஷன் போடுகின்றனர். தென்னாட்டில் 1500 பேர் வேலைக்கு129 ஆயிரம்பேர் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவருகின்றனர். அதாவது வடக்கேஒன்றுக்கு 20சதவிகித மென்றால் தென்னாட்டில் ஒன்றுக்கு 85 சதவிகிதமாகிறதல்லவா? அதனாலே தான் 'ஜனசக்தி'கூட தனது போக்கினையும் மறந்து வடக்கே வாடுது—தெற்கே தேயுது என்று தலைப்பு கொடுத்திருக்கிறது போலும்.

வடக்கே வாழ்கிறது—தெற்கே தேய்கிறது என தி. மு. கழகம் கூறுவதற்கு ஒரு திருத்தப் பிரேரேபணை போல வடக்கே வாடுது என்று தலைப்பு கொடுக்க முனைந்துள்ளது. 'ஜனசக்தி'

சற்று வாடியிருப்பவனுக்கு சிறிது டானிக் கொடுத்தால் போதும் பழைய நிலையை எளிதில் அடைந்துவிடுவான்—ஆனால் தேய்ந்து போகிறவன் இறுதியில் உருக்குலைந்துதான் போவான் எனவே கம்யூனிஸ்ட் ஏடாகிய 'ஜனசக்தி' யின் கணக்குப்படியும் ஆராய்ச்சிப்படியும் பார்த்தால் கூட வடநாட்டின் நிலை உயர்ந்தும் தென்னாட்டின் நிலை தேய்ந்தும் வருகிறதென்பது திட்டவட்டமாக நிரூபிக்கப்படுகிறது.

ஜனசக்தியின் இந்த வாதத்துக்கு ஒரு கதையை எடுத்துக் காட்டாக வைக்க விரும்புகிறோம்! ஒருசிற்றூரிலுள்ளவணிகர் ஒருவரும் அவருக்கு உதவியாக பருத்த ஆள் ஒருவரும் அயலூருக்கு வியாபார நிமித்தமாகச் சென்றனராம். தங்கள் பிரயாணத்தின் போது வழியில் இரவு நேரம் குறுக்கிடவே அவ்வணிகர் சத்திரம் ஒன்றில் தங்கியிருக்க எண்ணி அவ்வாறே அவர் சத்திரத்தில் படுத்துறங்க, அவருக்கு உதவியாக வந்த ஆள் மட்டும் சத்திரத்துக்கு வெளியே படுத்துறங்கினாராம். நடு இரவில் அவ்வழியாக சென்ற ஒரு கோஷ்டி அங்கு படுத்திருந்த பருத்த ஆளின் உடல் பட்டுத் தடுமாறி விழுந்தனராம்! உடனே அந்த ஆளை சோதனையிட அவரின் மடியில் செல்லாக் காசு நாலணா இருந்ததாம்—இதனைக் கண்ட அக்கோஷ்டியினர் ஆளைப்பாரு உலக்கையைப்போல யிருக்கிறான்—மடியிலிருக்கும் காசைப் பார்த்தால் செல்லாக் காசாகயிருக்கிறதே என்றுமுணுமுணுத்துவிட்டு திரும்பிச் செல்ல எத்தனித்தனராம். அதுவரையில் தூங்குவதைப் போல பாசாங்கு செய்த அந்தப் பருத்த உருவம் உடனே கோபமாக உங்க வீட்டு உலக்கை இப்படித்தான் மடியில் பணம் வைத்திருக்குமோ? ஆட்களைப்பாரு செல்லாக்காசாம் செல்லாக்காசு இந்த கேலிவேறே! இதோ பாருங்கள் இந்தக் காசு செல்லுமா இல்லையா என்பதை உள்ளே படுத்திருக்கும் செட்டியாரையே போய் கேட்டுப் பாருங்கள் என்றானாம்! பின்னர் செட்டியாரின் மடியில் வைத்திருந்த பணம் தனி உடைமையிலிருந்து பொதுவாக்கப்பட்டதாம்!

இந்தக் கதையில் வரும் பருத்த ஆளைப்போலத்தான் 'ஜனசக்தி' வடநாடு வாழவா செய்கிறது என்பதாக அங்கலாய்த்து மேற்கண்ட செய்தியை சாட்சிக்கு வைக்கிறது!

பரிதாபம்—பரிதாபம்!

என்னதான் மாஸ்கோ மருந்து வழும், அருளும் பெற்றாலும் உண்மையை எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்?

—நக்கீரன்

சுயமரியாதை இயக்கங் காத்த அன்னை நாகம்மையார்

..."நாயக்கரின் சுயமரியாதை இயக்கம் என து சன்மார்க்க இயக்கத்தினின்று பிறந்தது. அதற்கும் இதற்கும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஒற்றுமை. பத்து பங்கு வேற்றுமை- வேற்றுமை எங்களுக்குள் போர் மூட்டியது. எனினும் வேற்றுமைப் பகுதி ஆக்கம் பெறவில்லை. ஆக்கம் பெருமையே எங்கள் போர் நிறுத்தத்திற்குக் காரணம். இவ்வாறு பிறந்த சுயமரியாதை இயக்கத்தைப் பாதுகாத்த பெருமை அனைத்தும் நாயக்கரின் அருமை மனைவியார் நாகம்மையார் அவர்களுக்கே உரித்தானதாகும்"

-திரு. வி. க.

குறிப்பு :—அன்னை நாகம்மையாரின் நினைவு நாள் மே திங்கள் 11.

பாண்டுங் பாதையில் பார்மோசா!

உலக நாடுகளிடையே இன்று நிலவிவரும் அமைப்பைக் குலைத்து, உலகப்பெரும் போருக்கு வித்தூன்றி விடுமோ பார்மோசா பிரச்னை என்று உலக நாடுகள் அனைத்தும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தவேளையிலே, கூடிக் கலைந்துள்ளது பாண்டுங் மாநாடு.

பார்மோசாப் பிரச்னையைக் காரணமாகக்கொண்டு, அமெரிக்காவும், ரஷ்யாவும் மோதிக்கொள்ளும் "குஸ்தி மேடையாக" பார்மோசா ஆக்கப்பட்டுவிடுமோ என்று எண்ணிக் கொண்டிருந்த உலக நாடுகள் அனைத்தும், அண்மையில் கூடிய ஆசிய-ஆப்ரிக்க நாடுகளின் மாநாடு முடிவுகளைக் கண்டறிந்தபின், பார்மோசாவைச் சுற்றிச் சூழ்ந்து நிற்கும் யுத்த அபாயம் ஓரளவு குறையக் கூடும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளது. பாண்டுங் மாநாட்டில் சூ-என்-லாய் நடந்துகொண்ட விதமும், அவரது பேச்சுமே இந் நம்பிக்கைக்குப் பெரும் காரணங்களாகும்.

ஆனால் சியாங்-கே-ஷேக் சர்க்காரோ, எந்த நேரத்திலும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்கரின் உதவி கிடைக்குமென்ற நம்பிக்கை சியாங்-கே ஷேக்கை தவறான பாதையில் இழுத்துச் செல்கிறது! அத்யாவசியமானவர்களைத் தவிர, மற்ற அனைவரும் தலைநகர் தாய்பேயை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று தேசிய சீன சர்க்கார், சென்ற சில தினங்களுக்கு முன்பு அறிவித்துள்ளது!

சின்னஞ் சிறிய தீவு! அது இன்று உலகப் பெரும் பிரச்னையாக உருவெடுத்து விட்டது!

அழகுத் தீவு

'பார்மோசா' என்றால் 'அழகுத் தீவு' என்று பொருள் இத்தீவானது சீனத்துக்குக் கிழக்கே பசிபிக் சமுத்திரத்தில் உள்ளது. இத் தீவுக்கும் சீனத்துக்கும் உள்ள தூரம் சுமார் 90-மைல்கள். இந்த அழகுத் தீவானது, தென் வடவாக 225-மைல் நீளமும், 60-மைல் முதல் 80-மைல்கள் வரை அகலமும் கொண்டதாகும். இதன் கிழக் கரைக்கு இயற்கை அரணாக நீண்டபெரிய மலைகள் இருக்கின்றன. இம் மலைச் சிகரங்களில் சில, 14,500 அடி உயரம் வரை உள்ளது. இதைச் சுற்றி நிற்கும் கடற்கரையின் சுற்றளவோ. 780-மைல்களாகும். இந்த அழகுத் தீவுக்கு நேர்மேற்கே சுமார் 25-மைல் தூரத்தில் "பென்கடோர்" தீவுக் கூட்டங்கள் உள்ளன. இவையனைத்தும் பார்மோசாவைச் சார்ந்தவைகளே. அத்தீவுகளனைத்திலும் சிறந்த துறைமுக வசதிகள் உண்டு.

பார்மோசாவின் மத்தியபகுதி, செழிப்பு மிக்க நிலப்பரப்பு ஆகும். இதன் மேற்குக் கரையிலிருந்து பார்த்தால் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டும் விதத்தில் தொடராக மலைகளும், பசும்புல் வெளிகளும் காண்போரை கனவுலகத்துக்கு அழைத்துச் செல்லும் தோற்றத்துடன் காட்சிதரும். அத்தகு இயற்கை வனப்புதான் இத்தீவுக்கு 'அழகுத்தீவு' என்ற பெயரைத் தேடித்தரக்காரணமாக அமைந்ததோ என்னவோ?

விளையும் பொருள்

இங்கு நெல், கரும்பு, புகையிலை, மஞ்சள், எள், அன்னாசி, சர்க்கரை, வள்ளி ஆகியவைகளும் சணல், காபி, திராட்சை போன்றவைகளும் அதிகமாகப் பயிரிட்டு வருகிறார்கள். குரங்கு, கரடி, காட்டுப்பன்றி காட்டுப் பூனை, மலையாடு, புள்ளிமான், வெளவால், அணில் போன்ற பிராணிகள் இத்தீவில் மிகுதியாகஉண்டு. பறவை இனங்களில் இங்கு 145 வகைக்குமேல் உள்ளன, மலைசார்ந்த இடங்களில் கருங்காலி, கற்பூர மரங்கள் ஏராளமாக விளைவதால் கற்பூர உற்பத்தி இங்கு அதிகம்.

மனித வேட்டையாடுவதில் வல்லவர்களான இங்குள்ள பூர்வீகக் குடிகள் தற்போது மலைசார்ந்த இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது எண்ணிக்கை மட்டும் லட்சம் பேருக்குமேல் உள்ளது!

இத்தீவின் செழிப்பான பகுதிகளில், சீனாவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் வந்து குடியேறியவர்கள் இருக்கிறார்கள். ஜப்பானியர்கள் தொகை மட்டும் இரண்டு லட்சம் பேராகும்!

முதன் முதலில் இத்தீவைக் கண்டு தங்கியவர்கள், போர்ச்சுக்கீசியரே யாகும். அதன்பிறகு 1623-ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் குடியேறி, "சிலாந்தியா" என்ற கோட்டை ஒன்றையும் கட்டினார்கள். அதுவே தற்போது 'டைனான்' என்ற நகரமாக உருவெடுத்துள்ளது. சீனரும், ஜப்பானியரும் அன்று மிகுதியாக வாழ்ந்தாலும் கூட டச்சுக்காரர்களே இதனை ஆண்டு வந்தார்கள். 1626-ம் ஆண்டு இத்தீவின் வட பகுதியை

கோவை க. இரத்தினம்

ஸ்பெயின் நாட்டார் ஆக்கிரமித்தார்கள். ஸ்பானியர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் பெரும் மோதல் முண்டது. டச்சுக்காரர்களின் மூர்க்கத் தாக்குதலைத் தாங்க முடியாது ஸ்பானியர்கள் பின் வாங்கிவிட்டனர், பின்னர் 1661-ம் ஆண்டில் டச்சுக்காரர்களையும் ஒருவன் விரட்டி யடித்துவிட்டான்.

புரட்சி வீரன் காக்சிங்கா!

பார்மோசாவை விட்டு டச்சுக்காரர்களை விரட்டியடித்தவன் பெயர் 'காக்சிங்கா' என்பதாகும். இவன் பிரசித்தி பெற்ற சீனக் கொள்ளைக்காரன் ஒருவனுக்கும், ஜப்பானியப் பெண் ஒருத்திக்கும் பிறந்தவனாகும். சீன நாட்டுக்கு அருகே உள்ள இச் "சிங்காரத் தீவு சீனாவுக்குத்தான் சொந்தம்" என்பது அவனது வாதம்! பக்கத் துணையாக படைபலம் சேர்த்து புரட்சி செய்தான். ஏறக்குறைய 9-மாத காலம் விடாப் பிடியாகப் போராடி, அவர்களை தோல்வியுறச் செய்தான். அதைத் தொடர்ந்து அந்த அழகுத் தீவு சீன சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது.

1895-ம் ஆண்டு சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே நடைபெற்ற போரில் சீனா எதிர்பாராத தோல்வியைத் தழுவியது. இரு நாடுகளுக்கிடையே அப்போது ஏற்பட்ட உடன்படிக்கையின்படி பார்மோசா தீவு ஜப்பானுக்குச் சொந்தமாகிவிட்டது. என்றாலுங்கூட ஜப்பானியரது ஆட்சியை மக்கள் விரும்பவில்லை. கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்! ஜப்பானியரோ, ராணுவத்தைக்காட்டி மக்களைப் பயமுறுத்தி ஆட்சி செய்து வந்தனர். 1898-ல் ஓரளவு குழப்ப நிலை ஓய்ந்து அமைதி ஏற்பட்டது. 1920-ம் ஆண்டு ஜன சங்கியைப்படி இத்தீவின் மொத்த மக்கட் தொகை சுமார் 40 லட்சம். ஆனால் தற்போதுள்ள மக்கட் தொகையோ சுமார் 80-லட்சமாகும்.

ஜப்பானியர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த எண்ணிச் செயலாற்றிய வேளையிலேதான் மூண்டது இரண்டாவது மகாயுத்தம். அதில் ஜப்பான் தோல்வியுறவே ஜப்பானுக்குரிய பிரதேசங்கள் அனைத்தும் நேச நாடுகளின் பாதுகாப்புக்குக் கீழ் இருக்க வேண்டியதாயிற்று. அதைத் தொடர்ந்து பார்மோசா தீவு சீன சர்க்காரின் ஆளுகைக் குட்பட்டது.

சீனாவில் உள்நாட்டுப் போர் உச்ச நிலையடைந்து சீனா முழுவதும் கம்யூனிஸ்டுகளின் கரங்களில் வீழ்ந்தது. சீன தேசிய சர்க்காரின் தலைவர் சியாங்—கே—ஷேக், சீனாவைவிட்டு பார்மோசாவில் தமது பரிவாரங்களுடன் குடிபுகுந்தார். அத்துடன் அவரைத் தொடர்ந்து 10-லட்சம் சீனக்காரர்களும் பார்மோசாவுக்கு வந்து தங்கிவிட்டனர். வளம் கொழிக்கும் எழில் தீவாக இருந்த பார்மோசா, திடீர் ஜனப் பெருக்கத்தால் வறுமையின் பிடியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

முடிவாக ....

அந்த அழகுத் தீவில் அவ்தியுறும் மக்கள் சுதந்திரமாக வாழப்பிரியம் கொண்டவர்கள்; ஆனால் அதற்கான கிளர்ச்சி செய்யத் துணிவில்லாதவர்கள்! 1946-ம் ஆண்டு சுதந்திரம் பெறவேண்டும் என்று ஒரு சிலர் முயற்சித்தார்கள் அது வெற்றியடையவில்லை. கிளர்ச்சிக்காரர்களைத் தண்டித்தும், சிறையிலடைத்தும், அவர்களது சுதந்திர முழக்கம் சிறைகளின் சுவற்றைத் தாண்டி வராது பார்த்துக்கொண்டனர்.

தற்போது சியாங்-கே-ஷேக்கிடம் உள்ள படைகளில் பெரும்பாலானவை, மலைப் பகுதிகளில் மறைந்தபடி இருந்து வருகிறார்கள். மலைகளில் மறைந்துகொண்டு போர் புரிந்தால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கைபோலும்!

உலக அமைதி கருதி, பார்மோசா பிரச்னை சுமுகமாகத் தீரவேண்டும்; அதற்கான வழிவகைகளை மக்கள் சீன அரசாங்கம் செய்யும் என்று உலக நாடுகள் அனைத்தும் இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பார்மோசா தீவின் மீது வல்லரசுகளான அமெரிக்க நாட்டு விமானங்களும், ரஷ்ய நாட்டு விமானங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு அப்பாவி மக்களை கொன்று குவிக்கும் காட்சியைக் காண இன்றைய உலகம் விரும்பவில்லை. "காஷ்மீர் இளவரசிக்கு நேர்ந்த கதி, ஹிரோஷிமாவுக்கு நேர்ந்த கதி பார்மோசாவுக்கு நேரா வேண்ணம் மக்கள் சீன அரசாங்கமும் சியாங்-கே-ஷேக் கோஷ்டியினரும் இதற்கு நல்லதோர் முடிவுகண்டு. அழகுத் தீவை, அலங்கோலத் தீவாக்காமல் காப்பாற்றுவார்களாக.

கே. எம். கண்ணபிரானுக்குப் பாராட்டு

4-வது வட்ட தி. மு. கழகக் கூட்டம்

சென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் கே. எம் கண்ணபிரான் அவர்களுக்கு பாராட்டும் — தேநீர் விருந்தும் 8—5—55 ஞாயிறு காலை 9 மணிக்கு 4-வது வட்ட தி. மு. கழகத்தினரால் நடந்தேறியது. கழகச் செயலாளர் த. சேதுராசன் தலைமை வகித்தார், 4-வது வட்ட கிளையின் மாவட்ட உறுப்பினரான தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் மாவட்டச் செயலாளராக இருந்து, மாநிலத்திலேயே சென்னை மாவட்டத்தின் சிறப்பும் புகழும் பெருமைபடத்தக்க வகையில் பணியாற்றியது குறித்தும் எல்லா போராட்டங்களிலும் முன்னணியாக கலந்து கொண்டு சிறை சென்றது குறித்தும் 4-வது வட்டக்கழகம் பெருமைபடுகிறது என்று தீர்மானித்ததுடன் கே. எம். கண்ணபிரான் அவர்களையும் பொதுக்குழு உறுப்பினர் தோழர் ஆர். பாண்டியன் அவர்களையும் பாராட்டி தோழர்கள் ஏ. எம். முத்தையா, டி. இராசு, எம். எஸ். கே. உலகநாதன், கி. இராமலிங்கம், ஆகியோர் ஆர்வமிகுந்த சொற்பொழிவாற்றினர். பின் கண்ணபிரான் அவர்கள் தானடைந்த அனுபவங்களின் வாயிலாக பல நல்ல அறிவுரைகளை எடுத்துச் சொல்லி பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். பின் தேநீர் விருந்து நடைபெற்றது. பின் கழகச் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

வகையற்ற சட்டம்

மூலம் : போத்தன் ஜோஸப் ⊙ தமிழாக்கம் : எ. டி. பிரான்சிஸ், பெங்களூர்

[முன்னுரை:—ஆரியத்தின் ஆப்த காவலர்ராம் ஆச்சாரியார் பிரமிப்பதற்குரியவண்ணம் தம்மை அறிந்தோ அறியாமலோ இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து கல்கி இதழில் வழங்கியிருந்த கருத்துக்களைக் கண்ட சிறந்த பத்திரிகையாசிரியர் என்ன எண்ணுகிறார் என்பதே கீழே தரப்பட்டுள்ளது. தென்னாட்டுப் பத்திரிகையுலகில் ஒளிவிட்டு இலங்கும் மாண்பு படைத்தவர்களுள் ஒருவர் போத்தன் ஜோசப் என்பவர், இந்தி ஆக்கிரமிப்பை ஆணித்தரமாக எதிர்க்கும் தணிவும் பேராற்றலும் பெற்றவர். கர்னாடகத்தின் குரலெனப் போற்றப்படும் டெக்கான் ஹெரால்டு என்ற தினத்தாளில் 21—4—55 அன்றைய தலையங்கத்தில் தென்னவர்களின் உணர்ச்சியை படம் பிடித்துத் தருகிறார். அவர் தமிழரல்லர், மலையாளி, ஆக திராவிடர். இதோ அவர் பேசுகிறார்!]

★

ராஜாஜி இந்தியைப் பற்றி தனது கருத்தை வெளியிட்டுள்ளார், இதை முன்னரே வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அவர் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதன் நோக்கம் இராணுவத்திலும் இந்திய ஆட்சியாளர் தேர்வுகளிலும் இந்தி கட்டாயப்படுத்தப்படுகிறதென்பதல்ல. இந்திய சட்டத்திலே சாத்தியப்படாத வகையில் இந்தியைப்பற்றி சட்டம் இயற்றி இருப்பதும் அச்சட்டம் குறிப்பிடும் கால அளவிற்குள் பயன் காணமுடியுமோ என்பதும் அச்சம் விளைவிக்கக்கூடியன. சட்டம் நேர்மையற்ற முறையில வகுப்பட்டதென்றாலும் ராஜாஜிபோன்றவர்களுக்கே அச்சத்தை உண்டாக்கி விட்டிருக்கிறதே என்று நன்றிசெலுத்த வேண்டியதுதான்.

ஆச்சாரியார் முதன்முறை அமைச்சர் பதவி வகித்த காலத்தில், இந்தியை கட்டாய பாடமாக்க முனைந்தபோது தோன்றிய கொந்தளிப்புகள் பலப் பல. அத்தகைய எதிர்ப்புகள் தோன்றிய நேரம் சாதாரணமான காலமல்ல; காங்கிரஸ் ஆட்சிக்கு அமோகமான செல்வாக்கு பெருகியிருந்த சந்தர்ப்பம். அதுமட்டுமா! மகாத்மா காந்தி சொன்னவையெல்லாம் சட்டமாக உருவாகிய காலம்—அவ்வளவு சிறப்பு காங்கிரசுக்கும் அதன் தலைவர்கட்கும். ஆனாலும் அத்தகைய சாதகமான சூழ்நிலையிலும் இந்திக்கு எதிர்ப்பு தோன்றியதென்றால், தமிழின் மொழிவளமும், ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக வைத்துக் கொள்வதற்கிருந்த இயல்பும் அடிப்படைக் காரணங்களாகும். எனவே இந்தி எதிர்ப்பு இயற்கையாகவே மலர்ந்துவிட்டது.

பதினெட்டு ஆண்டுகட்கு முன்னரே சிறுவர்களை இந்திமொழியில் ஊரப்போட்டிருந்தால் இப்போது இந்திக்கு எதிர்ப்பிருக்காது என்றும் தேசிய துறைகளில் இந்தி தேர்வுகளில் தென்னவரும் தயக்கமின்றி பங்குகொள்ள முடிந்திருக்கும் என்றும் ஆச்சாரியார் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் முன்பு இந்தியை கொண்டுவந்த போது அவருக்கு நேர்ந்த அனுபவத்தை நினைவுபடுத்த வேண்டும். அப்போது ஏற்பட்ட எதிர்ப்பு வலிமை வாய்ந்த தென்பதையும் இயற்கையாகவே எழும்பியதென்பதையும் அறியவேண்டும். அவர்தம் பழையமுயற்சிகள் வெற்றி பெறவில்லையே என்று ஏங்குவது பயன் தரப் போவதில்லை.

சென்ற வாரம், இந்திய சட்டத்தில் 318–ம் பிரிவின் கீழ் பீகாரி மொழியை மாகாண ஆட்சி மொழியாக ஏற்படுத்தியது பீகார் அரசாங்கம். இவ்வாறே சென்னை மாநிலம் தமிழையும். ஆந்திர மாகாணம் தெலுங்கு மொழியையும் தத்தம் ஆட்சி மொழியாக மாற்றுவது நியாயமும் சட்டத்துக்கு இசைந்ததும் உரிமையுமாகும். இவ்வாறு மொழிவழி மாகாண ஆட்சி ஏற்படுத்தினால் தென்னாட்டவர் உள்ளத்தில் பிரிவு மனப்பான்மை தோன்றக்கூடும் என்றாலும் 'ஏகஇந்தியா' என்ற கட்டுப்பாடு சிதறிப்போகும் என்றாலும் மொழிவழி மாநிலப் பிரிவை சட்டங்களால் தடுக்க இயலாது.

25 ஆண்டுகளாவது இந்தியாவில் பிரிவு மனப்பான்மை தோன்றாமல் ஐக்கியமாக இருந்துவிட்டால் அதன் பின்னர் நாட்டைத் துண்டிக்கும் முயற்சிகள் நசிந்துபோகலாம் வகுப்புத் துவேஷத்தாலும், மதங்களின் மோதல்கள் காரணமாகவும் இந்தியா பல்வேறு நாடுகளாக பிரிந்துவிடும் என்பதைவிட இந்தி வெறியர்களின் கொடூர திணிப்பினாலேயே ஏற்படலாம். இந்த விவேகமற்ற திணிப்பு எவர் மீது செலுத்தப்படுகிறது? நாகரீக எழுச்சியும், இலக்கியச் செறிவும், கலாச்சார மகோன்னதமும் பெற்று தற்போது மறுக்க முடியாத மறுமலர்ச்சியை வேகமாக பெற்றுவருகின்ற முன்னேற்ற சமுதாயத்தின் மீது வளமற்ற இந்தியைப் புகுத்துவதென்றால் அவர்கள் எங்ஙனம் ஏற்பர்! வங்காளம், தமிழ், கன்னடம், மராத்தி, மலையாளம் போன்ற மொழிகளோடு இந்தியை ஒப்பிடுவது கழுதையை மற்ற பயனுள்ள மிருகங்களோடு ஒப்பிடுவது போலாகும். ஏனென்றால் இந்திக்கு மாண்புமிக்க பழங்கால வரலாறும் கிடையாது, வருங்காலத்தில் உச்ச நிலையை அடையுமென்பதற்கான அறிகுறியுமில்லை, கழுதையை எந்த நல்ல தொழிலுக்கும் பழக்குவிக்க முடியாதது போல.

சுதந்திர இந்திய அரசியல் சட்டம் ஏற்பட்ட காலத்தில் தேசிய மொழிப் பிரச்னை முக்கியமானதாகக் கருதப்படவில்லை, அதாவது அப்பிரச்னையில் முறையான ஆராய்ச்சிகள் நடத்தி முடிவுகாண வேண்டுமென்று கருதப்படவில்லை. சிறப்பாக, இந்தியா முழுவதற்கும் ஒரே மொழி தேசிய மொழியாக இருக்கும் தகுதியுண்டா, அதற்கான சூழ்நிலையுண்டா என்று ஆலோசிக்கப்படவில்லை. சுதந்திரம் பெறவேண்டுமே என்ற ஆர்வம், தேசிய மொழிப் பிரச்னையை முக்கியமாக கருதுவதற்கு தென்னிந்திய தலைவர்களையும், அந்தகால அரசியல் வாதிகளையும் தூண்டவில்லை. இந்தி திணிப்பைப் பற்றி தீரயோசிக்க அவர்கள் மனம் நினைக்கவில்லை. இவ்வாறு ஆராய்ச்சிகளும் ஆய்வுகளும் எழும்பாததால் இந்தி எதிர்ப்பின்றி நுழைய ஆரம்பித்துவிட்டது; சட்டத்தில் அசைக்கமுடியாத இடத்தை பெறுவதற்கு ஏதுவாகிவிட்டது. இந்தி பேசுவோர் தமக்குரிய பெரும்பான்மை செல்வாக்கால் அகம்பாவமாக மனம்போன போக்கில் தேசிய மொழியைப் பற்றி எதேச்சாதிகாரமான முடிவுகட்கு வந்தனர் சுதந்தரம் பெற்ற மகிழ்ச்சியில், சுதந்தரம் பெற்ற பின் 15 ஆண்டுகளில் இந்தி நுழைவு பூரணமாகிவிடவேண்டும் என்பனபோன்ற சட்டங்கள் நேர்மைதானா என்று நமது தலைவர்கள் அப்போது சிந்திக்க மறந்தனர், அதன் விளைவுதான் இன்று தென்னகம்தொல்லைகளால் சீரழிவது. சர்வாதிகார ஆட்சியுள்ள ரஷியா போன்ற சோவியத் நாடுகளிலுங்கூட ஒரே மொழியை தேசிய மொழியாக மாற்ற முடியாது என்று உணர்ந்து கொண்டார்கள் என்றால் ஜனநாயக நாடாகிய நம் நாட்டில் எங்ஙனம் அந்த இயற்கை விதியை எதிர்த்திட இயலும்!

தேசிய மொழியைப்பற்றி தென்னாட்டு அரசியல்வாதிகள் அசதியாக இருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, சட்டத்தை தம் வசப்படுத்திக்கொண்டு இந்தி மொழியினர் சட்டத்தில் 343–ம் பிரிவின் கீழ் 15 ஆண்டுகளில் நாம் இந்தியில் தேர்ச்சி பெற்றுதான் ஆகவேண்டுமென்ற கொடுங்கோன்மையை நம் மீது ஏவிவிட்டிருக்கின்றனர்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைவிட அதனைக் கொள்ளாதவர்களுடைய தொகையே அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மை. சுதந்தரம் பெற்றபின் 15–ஆண்டுகளில் ஆங்கிலம் ஏற்படுத்தியுள்ள அரசியல் அந்தஸ்திற்கு இந்தி உயர்த்தப்பட்டு, தேசிய விவகாரங்கள் அனைத்தும் இந்தியிலேயே நடைபெறவேண்டுமென்று வற்புறுத்துகின்ற 343ம் சட்டம் எவ்வளவு சீர்கேடானது, நேர்மையற்றது என்பதை அச்சட்டம் நடைமுறையில் கடைபிடிக்க முடியாமல் தோல்விகண்டு வருவதால் உணரலாம். தேசிய மொழி என்ற அரியாசனத்திற்கு இந்தியை அழைத்துச் செல்லவேண்டுமென்ற நப்பாசையால், மிகத் தீவிரமாக நூதன இந்திச் சொற்கள் உற்பத்தி செய்து குவிக்கப்படுகின்றன.

இத்தகைய ஆத்திரமான வளர்ச்சியால் இந்தி எந்த உருப்படியான நிலையையும் அடைய முடியாமல் போவதுடன், வளமிக்க முதிர்ந்த மொழிகளில் ஒன்றின் நிழலில் வளர்வதற்கு தகுதியற்றதாகி விட்டது வடநாட்டு அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கை உயர்வதற்கு இந்தியைக் கைவிட்டால் வகையில்லை என்ற நிலையிலிருப்பதால், அரசியலில் தமக்குள்ள பதவி செல்வாக்கையும் சட்டசபையில் தமக்குள்ள பெரும்பான்மையையும் பயன்படுத்திக்கொண்டு இந்திக்கு ஆதிக்கம் தேடித்தருகின்றனர். இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் இந்தியை பேசவில்லையென்றால்—ஒவ்வொருவரும் மற்ற அனைவருடனும் தமது கருத்தை இந்தி வாயிலாக பரிமாறிக்கொள்ள தவறிய மறுவினாடியே சுதந்திரம் நசித்துப் போகும், ஏக இந்தியா இடிந்துபோகும் என்ற கற்பனையால் ஏதேச்சாதிகாரமாக செயலாற்றி வருகின்றனர்; இந்தி படையெடுப்புகளுக்கு இதஞ் செய்கின்றனர். 15 ஆண்டுகளில் இந்தி பரவிவிட வேண்டுமென்ற சட்டம் தென்னாட்டவருடைய அரசியலுக்கு சாவுமணி! அவர்களது அரசியல் வாழ்க்கையையும் சிந்தனைகளையும் அழித்துவிடுவதற்கான திட்டம்! இராணுவத்தில் இந்திக்கு ஏகபோக உரிமை வழங்குவது மக்களிடையே குமுறலையும் பிளவையும் ஏற்படுத்துவதிலேதான் முடியும்.

பலர் இந்தி வார்த்தைகளை மனப்பாடம் செய்துவிட்டார்கள் என்றால் அந்த மொழி தேசிய மொழியாக மாறிவிட்டதென்று அர்த்தமாகாது. சிந்தித்த அளவிலேயே பேசகூடியபடி பயிற்சி மேற்கொள்ளப்பட்டு, நடைமுறைக்கு எளிதாக்கப்பட்டாலொழிய தேசிய மொழி என்ற உயரிய பீடத்திற்கு இந்தி அருகதையற்றதாகும். தென்னாட்டவரைப் பொறுத்தமட்டில் ஆங்கிலமும் இந்தியும் இரண்டுமே வேற்று மொழிகள்தான். எனவே இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி பிறக்கும்போது வளமற்ற இந்திக்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற உறவு எதுவும் கிடையாது. அவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது உசிதம் என்று முறையாக சிந்தித்து வளமிக்க ஆங்கிலத்தையே நாடுவர், வளங்குன்றிய இந்தியை புறக்கணிப்பர். இந்திக்கு இல்லாத உறுதியான சிறப்பியல்புகளும், உலகப் பொதுமொழி என்ற பாத்தியதையும் ஆங்கிலத்திற்குண்டு; ஆதலின் தென்னவர் அதை ஏற்பதில் பொருளுமுண்டு. இதனை சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா உணர்ந்துகொண்டிருக்கிறார். இந்தியின் தகுதியின்மையை அவர் உணராதவரல்ல, அதிக வசைமொழிகளைக்கொண்டது இந்திதான் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அந்த குறிப்பு தவறாக இருக்கமுடியாது, அவர் இந்தியில் நிபுணராதலால்.

நாட்டின் நடப்பை உணர்ந்து தேசிய மொழிப் பிரச்னைக்கு வகை செய்தல் வேண்டும், இதனை ஆச்சாரியார் இப்போது உணர ஆரம்பித்து விட்டார். "இந்திய அரசியல் திட்டத்தில் இந்தியை 15 ஆண்டுகளில் புகுத்தியே ஆகவேண்டும் என்று எழுதிவைத்திருந்தாலும் அச்சட்டத்தைக் காட்டி இந்தி வெறியர்கள் இந்தியை பலவந்தமாகத் திணிக்கவும் அதனைக் கற்கவில்லையென்றால் ஆபத்தென்று அச்சுறுத்தவும் முற்படக் கூடாது. அரசியல் சட்டத்தை மாற்றும் போது முதலில் நான் இந்த சட்டத்தைத்தான் மாற்றுவேன் என்று ஆச்சாரியார் அறிவித்துள்ளார் சூழ்நிலையையும் காலத்தின் போக்கையும் உணர்ந்து கொள்கிறார் என்றுதான் தெரிகிறது.

சிரிப்பு!

— அமலன் —

1

ஹெட்கிளார்க்: பாருங்க சார் இந்த செக்கண்ட் கிளார்க் பண்ணின வேலையை;...நான் உட்காருகிற நாற்காலி மேலே குண்டூசிகளை நிறுத்தி வச்சிருககார்!

ஆபீஸர்: கூப்பிடுமையா அந்த மனுஷனை, நான் பேசிக்கிறேன்!...ஹும்!...ஸ்டேஷனரியை வேஸ்ட் பண்ணக் கூடாதுன்னு அவருக்கு எத்தனை தரம்தான் சொல்றது!

2

நாடக நடிகர்: நேத்து நாடகத்திலே என் நடிப்பை மக்கள் எப்படி ரசிச்சார்கள்!

நண்பர்: ஓ!...நீங்க செத்து விழுகிற கட்டத்திலே ஒரே அப்ளாஸ்தான் போங்கோன்னு...

3

தமிழாசிரியர்: உதாரணமாக, 'கிழவன்' என்பதற்குப் பெண்பால் 'கிழவி' எங்கே கண்ணு! கணவனுக்குப் பெண்பால் யாது!

கண்ணன்: 'கணவி' சார்!

4

புருஷன்: [தொட்டிலை ஆட்டியவாறு] இந்தா பாரு உன் பிள்ளையை!...அழுகையை நிறுத்த மாட்டேன்னு அடம் பிடிக்கிறான்! நானும் எப்படி யெப்படியெல்லாமோ பயங்காட்டிப் பார்த்துட்டேன்!... இனிமே நீதான் வந்து ஒரு பாட்டுப்பாடிப்பாரேன்!

மனைவி: !...!...!

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம். மேமுடிய அனுப்பப்பட்டுள்ள நிலுவை விவரப்படி அதற்கான பணத்தை இதுவரை அனுப்பாத ஏஜெண்டு தோழர்கள் 17-5-55-க்குள் தவறாது அனுப்பிவைக்குமாறு கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி.

திராவிடன்

சென்னை : 13—5—55 : வெள்ளி

பத்தாண்டுப் பதிகம்!

●

இந்தியத் துணைக்கண்டத்திற்கு 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சுயராஜ்யம் கிடைத்ததிலிருந்து இன்று வரை அதனின் பெயரில் சுயராஜ்யம் என்ற சொல்லிலிருந்து குடியரசு ஆட்சி என்பது வரை பெரிய பெரிய மாற்றங்கள் பெற்றுவிட்டன! ஆட்சி பீடத்திலுள்ளோரும், ஏட்டளவில் தீட்டப்பட்டுள்ள இப்பெயர் மாற்றத்தின் பெருமையைப் பேசி காலங்கழிக்கிறார்களேயல்லாது பெயருக்கேற்ற வகையில் மக்களின் துயர்களைத்தீர்க்க முனைந்தார்களில்லை. அதிலும் குறிப்பாக தென்னாட்டின் நிலையும் அதன் மக்களின் வாழ்வும் அறவே தேய்ந்து வருகிறதென்று கூறின் மிகையாகாது. ஏன் கடந்த எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஆட்சிமுறையை நடுநிலையிலிருந்து சிந்தித்துத் தீர்ப்புக் கூறுவோர் எவரும் நாம் கூறும் குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டேதீருவர்.

வெள்ளையர்கள் இந்தியாவை, தங்கள் பிடிப்பில் சிக்கவைத்து தர்பார் நடத்திய போது, தென்னாட்டின் அரசியல், பொருளாதார, தொழில் துறை ஆகியவைகள் எந்நிலையிலிருந்ததோ அதைவிட இன்னும் கீழான நிலையில் தான் இந்தியக் குடிஅரசு தர்பாரிலும் காட்சியளித்து வருகிறது.

தென்னாட்டுக்கு இந்தியக் குடியரசு ஆட்சியில் இழைக்கப்பட்டுவரும் ஓரவஞ்சனையான நடவடிக்கைகளில் முதன்மையாயிருப்பது வேலையில்லாத் திண்டாட்டமேயாகும்.

நாட்டின் இரு கண்களாக மதிக்கப்படும் மாணவத் தோழர்கள், பாட்டாளி மக்கள் ஆகியோர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தவிப்பதும் அதன் காரணமாக அவர்களது குடும்பங்கள் அவலநிலைக்கு ஆளாகுவதுமான விவரங்களை இந்நாட்டுத் தேசிய ஏடுகளே அடிக்கடி எடுத்துக் காட்டி வருகின்றன. எனினும் நம் ராஜ்ய ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் இக்கொடுமைகளை ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்களா என்றால் அதுதானில்லை. அதற்கு பதிலாக தென்னாட்டிலிருக்கும் சாதாரண தொழிற்சாலைகளில் சிலவற்றை முதலாளிகள் மூடுவிழா செய்வதற்கு ஆட்சிபீடத்தினர் அருள்புரிந்திருக்கின்றனர். இந்த அளவுக்குத்தான் சென்னை மாநில மந்திரிகளுக்கும் அதிகாரமிருக்கிறது!

ஆனால் வடநாட்டிலோ ஏராளமான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருவதுடன் அவ்விடம் வேலையில்லா நெருக்கடி தணிந்து விட்டதென்று இந்தியப் பிரதமர் நேருவே மார்தட்டிப் பேசி பரவசமடைகிறார்! அகதிகள் பிரச்னையிலிருந்து ஆண்டிகள் பிரச்னை வரை வடக்கே விறுவிறுப்பாக பரிகாரம் தேடப்பட்டு வருகிறது. ஆனால் தென்னாட்டு மக்களுக்கோ இந்திய ஆட்சிபீடத்தாரால் இதோபதேசங்கள்தான் நாள் தவறாமல் கூறப்பட்டு வருகின்றன!

சென்ற வாரம் கூடிக்கலைந்த அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி பேசுகையில் "இன்னும் பத்தாண்டுகளில் வேலையில்லாக்கொடுமையை போக்க முயற்சிப்போம். அதுவரை சற்று பொறுத்திருக்க வேண்டும்" என்று அபயம் கூறியிருக்கிறார்!

பொறுத்திருங்கள்—என்ற உபதேசத்தைத் தென்னாட்டு மக்கள் ஏழெட்டு ஆண்டுகளாகக் காதுகொடுத்துக் கேட்டு கனவு கண்டு கொண்டுதானிருக்கின்றனர். ஆனால் கண்ட பலன் என்ன? மீண்டும் பத்தாண்டுப் பதிகம் பாடுவதைத் தவிர ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் செயல் முறையில் நாணயமாக நடந்து கொண்டார்கள் என்று கூறுவதற்கு எடுத்துக் காட்டுக்காகிலும் இப்பிரச்னையில் ஏதேனும் செய்யப்பட்டதாயென்றுகேட்கிறோம்.

நேரு சர்க்காரின் ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் குறிப்பாக திராவிட நாட்டிலுள்ள ஏழை நடுத்தர மக்கள் இன்னும் பத்து ஆண்டுகளுக்கு உணவு உட்கொள்ளாதிருக்க ஏதாவது மருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? 1947-ம் ஆண்டிலிருந்து பொறுத்துக் கொண்டிருப்பது காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்களுக்கும் நேரு சர்க்காருக்கும் புலப்படவில்லையா? எனவே மேலும் மேலும் உபதேசம் செய்து ஏழை — நடுத்தர மக்களின் வாழ்வைப் பறிப்பது நீதியாகுமா என்று கேட்கிறோம்?

நிற்க, சுதந்திரம் பெற்ற சின்னஞ் சிறு நாடுகளெல்லாம் நாலைந்து ஆண்டுகளுக்குள் வேலையின்மையை ஒழித்துக் கட்டியிருக்க நேரு சர்க்காரால்மட்டும் ஏன் முடியவில்லை? இதற்குக் காரணம் ஒன்று ஆட்சி முறையில் கோளாறு இருக்க வேண்டும் அல்லது நேரு சர்க்காருக்கு தென்னாட்டுப் பிரச்னைகள் என்றால் கிள்ளுக் கீரையாக யிருத்தல் வேண்டுமல்லவா?

எனவே தென்னாட்டில் மலிந்துள்ள வேலையின்மையை ஒழித்து ஏழை—நடுத்தர மக்களுக்கு ஓரளவாவது வாழ்வளிக்க வேண்டுமென்பது நேரு சர்க்காரின் உண்மையான எண்ணமாயிருந்தால் இப்படி பத்தாண்டுப் பதிகத்தைப் பாடுவதைவிட தென்னாட்டுக்குச் சுதந்திரமான தனி அரசியல் உரிமை தரட்டும். இரண்டே ஆண்டுகளில் இந்நாட்டு சர்க்கார் மூலமாக வேலையில்லாக் கொடுமையை ஒழித்துக்கட்ட முடியுமென்ற உறுதியை நேரு சர்க்காருக்கு பணிவன்பான அறைகூவலாகத் தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்களும் நேரு சர்க்காரும் முன்வருவார்களா ?

●

கைத்தறி ஆடையையே அணிவீராக.

உடனே தேவை

அறந்தாங்கியில் திராவிடன் இதழ் விற்பனைக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டு உடனே தேவை.

'விவரங்களுக்கு 'திராவிடன்' - சென்னை-1

திருத்தம்

1—5—55 சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மேதினவிழா கூட்டம் சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினரால் நடத்தப்பட்டது என சென்ற வாரம் திராவிடன் இதழில் வந்த செய்தியில் 42-வது வட்டக் கிளையின் சார்பில் அக்கூட்டம் நடைபெற்றதாகக் கொள்ள வேண்டுகிறோம்.

—ஆ—ர்

நடக்க இருப்பவை

மலையாண்டிப்பட்டினம் தி. மு. கழகம்

13—5—55 வெள்ளிமாலை 6 மணிக்கு பொள்ளாச்சி அடுத்த மலையாண்டிப்பட்டினம் கடைவீதித் திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், அ. ச. பாலு பேசுவர்.

சென்னிமலை தி. மு. கழகம்

14-5-55 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு சென்னிமலை குமரன் சதுக்கத்தில் மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

நாகை தி. மு. கழகம்

15—5—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு அவுரித் திடலில் மாபெருங்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், சி. ஜம்பு பேசுவர்.

மாயவரம் தி. மா. மு. கழகம்

இக்கழக செயற்குழுக்கூட்டம் 15-5-55 காலை 9-மணிக்கு கூறைநாடு ஆசிரியர் வேலாயுதம் மன்றத்தில் நடைபெறும். அது சமயம் புத்தாண்டு தேர்வு, இரண்டாவது ஆண்டு விழா ஆகியவைகள் குறித்து முடிவு செய்யப்படும்.

இளங்கோ மன்ற கட்டிட திறப்பு விழா

15-5-55 மாயவரம் கூறைநாடு இளங்கோ மன்றத்தின் புதிய கட்டிடத்தை தன்மான இயக்க வீரர் சித்தக்காடு இராமையா அவர்கள் திறந்து வைப்பார்கள். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

சித்துக்காடு தி. மு. கழகம்

பட்டுக்கோட்டை அடுத்த சித்துக்காடு தி. மு. கழக சொற்பயிற்சிக் கூட்டம் 15—5—55 அன்று துவக்கப்படும் பின்னர் திங்கள் தோறும் 1—15-ம் நாட்களில் பயிற்சி வகுப்பு தொடர்ந்து நடைபெறும் என சொற்பயிற்சிக்குழு செயலாளர் எஸ். வேல் அறிவிக்கிறார்.

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம்

பொதுக்குழுக் கூட்டம் 15—5—55 காலை 10 மணியளவில் காந்தவல்லி தி. மு. கழக அலுவலகத்தில்நடைபெறும். மாநில மாநாட்டிற்குநிதி அளித்தல் போன்ற முக்கிய பல பிரச்னைகளிருப்பதால் பொதுக்குழு பிரதிநிதிகளும் கிளைக்கழக செயலாளர்களும் தவறாது குறித்த நேரத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன் என பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் தெரிவிக்கிறார்.

மதுரையில்

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

அவர்கட்கு வரவேற்பு பாராட்டுக் கூட்டம்

15—5—55 ஞாயிறு

●

காலை. 9-மணிக்கு புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு

காலை. 10-மணிக்கு அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகம் ஆண்டு விழா

மாலை. 4-மணிக்கு திடீர் நகரிலிருந்து ஊர்வலம்

மாலை. 5-30-மணிக்கு கீழ்ச்சந்தைப்பேட்டை அண்ணாதுரை இலவச படிப்பகம் ஆண்டு விழா.

6 மணிக்கு கீழ்ச்சந்தைப்பேட்டை வைகையாற்றில் எ. கோவிந்தசாமி எம். எல். ஏ., காஞ்சி கல்யாண சுந்தரம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மதுரை எ. வி. சௌந்திரராசன், எஸ். முத்து ஆகியோர் பொதுச்செயலாளரைப் பாராட்டிப் பேசுவர்.

நடிகவேள் ராதா சுற்றுப் பயணம்

மே, 14—ரத்தக்கண்ணீர் ஆயர்பாடி [வால்பாறை]
15—ராமாயணம் ,,
17—ராமாயணம் வாழப்பட்டி (மதுரை மா)
18—ராமாயணம் பன்னைப்புரம் ,,
19—ராமாயணம் திருப்புவனம் ,,

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

13

திராவிட மொழிகளுக்கும் திராவிட மக்களுக்கும் செய்துள்ள நன்மைகள் பலப் பலவாகும். திராவிட மொழிகளின் சீரும் சிறப்பும் உலகம் எங்கணும் தெரியப்படுவதர்கு மேலை நாட்டு கிருஸ்தவப் பாதிரிகளே காரணமாவர்.

திராவிட நாட்டு மக்கள் திராவிட மொழிகளை நன்கு கற்று தேர்ச்சிப் பெறுதற்கான அடிப்படைக் காரியங்கள் யாவும் மேலை நாட்டு கிருஸ்தவப் பாதிரிமார்களால் தான் செய்யப்பட்டன. பொது மக்கள் சுலபமாக எழுதவும் படிக்கவும் ஆன வழிகளையும் முறைகளையும் அமைத்துக் கொடுத்தவர்களும், மக்களிடையே கல்வி அறிவு வளர்ச்சிப் பெறுதற்கான ஒப்பற்றத் தொண்டாற்றியவர்களும் கிருஸ்தவப் பாதிரிமார்கள்தான். தமிழ் எழுத்துக்களையும் வாக்கியங்களையும் ஒழுங்காகவும் எளிய முறையிலும் அமைக்கும் வழிவகைகளை செப்பனிட்டுத் தந்தவர்களும் கிருஸ்தவப் பாதிரிமார்களே. ஒரு வாக்கியத்தில் உள்ள சொற்களிடையே இடம் விட்டு எழுதும் முறையை நடைமுறைக்கு கொண்டு வந்ததும் அவர்களே.

பல சொற்களால் ஆவதே வாக்கியம் என்பது தெரிந்திருந்தாலும் திராவிட மக்கள் அக்காலத்தில் சொற்களையெல்லாம் இடைவெளியின்றி தொடர்ச்சியாக எழுதிவந்தனர். எளிய முறையில் சிறு நூல்களை அச்சியற்றியும் திராவிட மொழி நூல்களைப் புதுப்பித்தும், உலகச் செய்திகளை உணர்தற்கான தினசரி வெளியீடுகளை வெளியிட்டும் மக்களின் கல்வி அறிவை சிறக்கச் செய்தனர் பாதிரிமார்கள். ஓரெழுத்துச் சொற்கள் ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச் சொற்கள் என்றிப்படியாக, எளிய திராவிடமொழி துவக்கச் சுவடிகளை அச்சியற்றி திராவிடச் சிறுவர்கள் சிரமமின்றி தமிழ் எழுதவும் படிக்கவும் உதவி புரிந்தனர். மேல்வகுப்பு மாணவர்கள் கற்பதற்கான நூல்களையும் இலக்கிய நயம் மிளிர அச்சியற்றி கல்வித் தொண்டு செய்து வந்தனர். அகராதிகள் முதலியவற்றையும் நன்முறையில் ஆக்கித் தந்தவர்களும் கிருஸ்தவப் பாதிரிகளே. இலக்கியங்களில் ஈடுபடுமுன் திராவிட மொழிகள் யாவற்றையும் சுலபமாகக் கற்றுக் கொள்ளும்படியான 'வொக்கபுலரிகள்' இயற்றித் தந்தனர். இம்முயற்சி திராவிடர்களுக்கு ஒரு புதினமேயாகும்.

திராவிட மொழிகள் ஒன்றுக்கொன்று உறவும் முறையும் உடையன என்னும் உண்மையைத் தெரிவித்து திராவிட இனப்பற்றுக்கு அடிகோலியவர்களும் கிருஸ்தவப் பாதிரிமார்களேயாம். திராவிட அறிஞர்கள் திராவிட மொழிகளில் சிறந்த இலக்கியங்களைப் படைக்கவும் போற்றவும் வழிகாட்டியாய் இருந்தவர்களும் கிருஸ்தவப் பாதிரிகளே. வசன நடையில் வல்லவர் ஏற்படவும் வசன நூல்கள் பெருகி வளம் பெறவும் பாதிரிமார்களே காரணமாவர். திராவிட மொழிகளைப் பற்றியும் இலக்கிய இலக்கணங்களைப்-பற்றியும் ஆராய்ந்து சிந்தித்து ஒற்றுமை வேற்றுமைகளைக் காணவும், உயர்வு தாழ்வுகளை அறியவும், சீரையும் சிறப்பையும் உணர்ந்து போற்றவும் கற்றுத் தந்த பெருமை கிருஸ்தவப் பாதிரிமார்களையே சாருவதாகும். வசன நூல்கள் மக்களிடையே பரவவும், பரவி தமிழ் நூல்களைப் பயிலவும் வழிவகுத்தவர் கிருஸ்தவப் பாதிரிகளேயாகும்.

திராவிட நாட்டிற்கும் மேலைஐரோப்பிய நாட்டினருக்கும் கிருஸ்துவின் காலத்திற்கு முன்னிருந்தே வாணிகத் தொடர்பிருந்து வந்தது உண்மையே. கிருஸ்துவின் சிறந்த சீடர்களில் ஒருவரான தாமஸ் என்பார் திராவிட நாடடைந்து கிறிஸ்துமத உபதேசம் செய்து 'கடைசியில் சென்னையில் இயற்கை யெய்தியதும் வரலாறு கூறும் உண்மையே. ஆயினும் திராவிடத்துக்கும் ஐரோப்பாவிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படத் துவங்கியது வாஸ்கோடகாமா திராவிடத்திற்கு வந்தடைந்த பின்னர்தான். நீண்ட நாட்களாகவே திராவிட நாட்டிற்கு நேரடியான, அதாவது அவர்களின் தொடர்பற்ற, ஒரு கடல் மார்க்கத்தை கண்டு பிடிப்பதற்கு மேல் நாட்டு ஐரோப்பியர் முயன்று வந்தனர்.

போர்ச்சுக்கல் தேசத்தவரான வாஸ்கோ-டா-காமா என்பவர் அத்தேசத்து மன்னனான எமானுவெல் விருப்பப்படி 1497-ம் ஆண்டு போர்ச்சுகல் தேசத்தை விட்டுப் புறப்பட்டு, இடையில் பல இன்னல்கட்கு ஆளாகி கடைசியில் ஒரு அரபுவின் துணை கொண்டு திராவிட நாட்டின் மேற்குக் கடற்கரைத் துறைமுகமாகிய கள்ளிக்கோட்டையை 1498-ம் ஆண்டு மே மாதம் 22-ந் தேதி வந்தடைந்தார். வாஸ்கோ-டா-காமா கண்டு பிடித்த கடல் வழியைப் பயன்படுத்தி பல

மேலைநாட்டுக் கிருஸ்துவர்கள்

ஐரோப்பிய நாட்டினரும் திராவிட நாட்டிற்குவரத்துவங்கினர் இவ்வண்ணமாக மேலை நாட்டிற்கும் திராவிடத்திற்கும் தொடர்பு ஏற்பட்டு வாணிபம் வளரத் துவங்கியது.

வாணிபம் காரணமாகவந்த இம்மேலை நாட்டு கிருஸ்தவமத ஐரோப்பியர்கட்கு வேறு பல குறிக்கோள்களும் இருந்து வந்த உண்மையை சரித்திரம் தெரிவிக்கின்றது. நாடு பிடிக்கும் மண்ணாசையும், கிருஸ்தவ மதத்தைப் பரப்பும் மதப் பிரசார எண்ணமும் அவர்கட்கு இருந்த வந்த உண்மைகள் இவர்கள் திராவிட நாட்டை அடைந்த சில ஆண்டுகட்குள்ளாகவே தெரிய வந்துவிட்டன. மதப்பிரசாரத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எவ்வித எதிர்ப்பும் இருக்கவில்லை மதப் பிரசாரத்திற்கென பிரசாரம் செய்யும் பாதிரிகளை கூட்டி வந்தனர். திராவிடரிடையே கிருஸ்தவமத போதனை செய்யும்படிச் செய்தனர். இதுதான் மேல் நாட்டு ஐரோப்பியரும் கிருஸ்துவப் பாதிரிகளும் திராவிடத்திற்கு வந்த வரலாறாகும்.

இப்படி திராவிடத்தை யடைந்த கிருஸ்துவப் பாதிரிமார்கள் மக்களிடையே தம் மதப்பிரசாரத்தை செவ்வனே செய்வதற்கு திராவிட மக்கள் பேசும் மொழிகளைப் பயில வேண்டிய அவசியம் ஏற்படவே தம் அரும் முயற்சியினால் அம்மொழிகளைக் கற்றுக் கொண்டனர். கிருஸ்க்துவமத ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களோ தங்கள் அலுவல் முறைகட்கு உதவியாக இருப்பதற்கெனவும் திராவிட மக்களின் கலை மொழி ஆகியவற்றின் வரலாறுகளை அறிந்து கொள்வதற்கெனவும்விழைந்து அவ்விழைவின் காரணமாக தமக்கென கல்விக் கூடங்கள் ஏற்படுத்திக்கொண்டு அக்கல்விக் கூடங்களில் திராவிடமொழிகளையும் இலக்கியங்களையும் கற்று வந்தனர். இவ்வாறாக அயல் நாட்டினரான திராவிடரிடையே தமது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கென திராவிட மொழிகளையும் இலக்கியங்களையும் கற்றுணர்ந்த மேல் நாட்டு பாதிரிமார்களும் அதிகாரிகளும் இந்நாட்டிற்குப் புரிந்த நற்பயன்கள் பலப்பலவாகும். ஐரோப்பிய அதிகாரிகளால் ஏற்பட்ட நன்மைகளைவிட பாதிரிமார்களால் ஏற்பட்ட நலன்களே அதிகமானதாகும். இதுதான் மேல்நாட்டு கிருஸ்துவப் பாதிரிமார்கள் திராவிடமக்கட்கு தொண்டு புரியத் தொடங்கிய வரலாறாகும்.

கல்வித்துறையில் இவர்கள் ஆற்றிய அரும்பணிகளை இனி ஆராய்வோம்.

தமிழ் மொழியில் தனி வசன நூல்கள் ஐரோப்பியப் பாதிரிகளாலும் ஐரோப்பிய அதிகாரிகளாலும் இயற்றப்பட்டு செல்வாக்குப் பெறலாயின. இக்காரியம் திராவிட மக்களை புத்துயிர் அடைய்யுபடிச் செய்த அரும் பெரும் காரியமாகும். பொதுமக்களிடையே வசன நூல்களை நடமாடவிட்ட முதல்வர்கள் இப்பாதிரிமார்களும் அதிகார்ரிகளுமேயாவர் எனில் முற்றிலும் உண்மையேயாகும்.

மக்களின் கல்வி சிறக்க வேண்டுமானால் வசன நூல்கள் பெருகி இருக்க வேண்டும். வசன நூல்களால் மட்டுமே மக்கள் முன்னேற்றமடைய முடியும். செய்யுள் இலக்கிய நூல்களால் முன்னேற்றமடைவது முடியாத காரியமே. செய்யுளில் இயற்றப்பட்டுள்ள நூல்களைக் கற்பதற்கு முதலில் நிகண்டு முதலிய அகராதி நூல்களைக் சுற்றுணர வேண்டியது அவசியமாகும். இப்படி நிகண்டுகளைக் கற்று பின்னர் இலக்கியங்களைப் பயில்வது என்பது யாரோ ஒருவரால்தான் முடியுமே தவிர பெரும்பாலானவர்களால் முடியாததாகும். ஆகவே செய்யுள் நூல்களைவிட நடைமுறை வசனநடை நூல்களே கற்றறிதற்கு இலகுவானவையாகும். அன்றியும் குறுகிய காலத்திற்குள் பலதரப்பட்ட நூல்களையும் கற்றறியவும் வசன நூல்கள் உதவியாக வுள்ளன. இச்சிறப்பான வசனநடை வழிவகைகளை செப்பனிட்டுத் தந்தவர்கள் மேல் நாட்டு ஐரோப்பியர்களும் பாதிரிமார்களுமேயாவர்.

மேல் நாட்டார் வருவதற்கு முன்னர் நம் திராவிட நாட்டில் வசன நூல்கள் அரிதினும் அரிதாகவே நிலவி வந்தன. கணித நூலாகட்டும், மருத்துவ நூலாகட்டும், தத்துவ நூலாகட்டும் மற்ற கதை வரலாறு ஆகிய நூல்களாகட்டும் இலக்கண இலக்கியங்களாகட்டும் இவைகள் யாவும் செய்யுள் வடிவில்தான் இருந்து வந்தனவேயன்றி வசன உருவில் இருக்கவில்லை. ஆயினும் சில நூல்கள் செய்யுள்களால் ஆக்கப்பட்டிருப்பினும் இடையிடையே வசன நடைகளும் இடம் பெற்றிருந்தன. ஆகவே பண்டைக் காலத்தில் வசன நடையும் நிலவி வந்திருந்த உண்மை தெரியவரும். ஆனால் நமக்கு உரைநடையில் எழுதப்பட்ட வசன நூல்கள் கிடைக்கவியலாது போய்விட்டன. இது வருந்தத்தக்கதுடன் வியக்கத்தக்க செய்தியுமாகும்.

நிற்க பண்டைக் காலத்தில் வசன நூல்கள் இருந்தன என்பதை தமிழ் நூல்களை ஆராய்வதால் தெரிந்து கொள்ள முடிகின்றது. **"இறையனார் அகப்பொருள் உரை"**யானது அக்காலத்திய ஆசிரியர்கள் வசன நடை நூல்கள் இயற்றுவதில் வல்லவர்களாக இருந்தனர் என்னும் உண்மையை பறைசாற்றி நிற்கின்றது. இறையனார் அகப்பொருளின் உரைப்பாயிர வசன நடையின் அமைப்பையும் இனிமையையும் கவர்ச்சியையும் படித்து இன்புறாத தமிழ் அறிஞர்கள் இருக்க முடியாது என்றே கூறலாம். இததனை சிறப்பான

மயிலை. சீனி. வெங்கடசாமி

வசன நடையினை கையாண்டுள்ள பண்டைய ஆசிரியர்கள் தனி வசன நூல்களை இயற்றாமலிருந்திருக்க முடியாது என்பதே நமது யூகமாகும்.

ஆனால் வசன நூல்கள் அக்காலத்தில் இயற்றப்படாது போனதற்கு அடிப்படைக் காரணங்கள் வேறானவைகளாகும். அக்காரணங்களையும் தெரிந்து கொள்வதானது நம் பண்டைக்காலக் கல்வி நிலையை புரிந்து கொள்வதற்கு ஏதுவாகும்.

"இக்காலத்தில் கஷ்டமின்றி எழுதுவதற்கேற்ற கருவிகளும் சாதனங்களும் ஏராளமாக அமைந்திருக்கின்றன. காகிதம், பேனா, பென்சில் முதலிய கருவிகள் எழுதுவோருக்கு யாதொரு கஷ்டமுமின்றி உதவியாய் நிற்கின்றன. ஆனால், பண்டைக் காலத்தில் எழுது கருவிகள் இவ்வளவு சாதகமாய் அமைந்திருக்கவில்லை. பனையேடுகளும் இருப்பெழுத்தாணியுந் தவிர வேறு எழுது கருவிகள் அக்காலத்தில் இருந்ததில்லை. பனையேடுகளில் எழுத்தாணியால் எழுதுவது, காகிதத்திற் பேனாவினால் எழுதுவதுபோல் சுலபமான காரியமல்ல; மிகக் கடினமான காரியம். ஆகையால் பண்டைத் தமிழர் எழுத்து வேலையை எவ்வளவு குறைக்க வேண்டுமோ அவ்வளவும் குறைக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆகவே 'சுருங்கச் சொல்லல்' என்னும் முறையைக் கைக்கொள்ளவேண்டியிருந்தது. வசனயில் நூல் இயற்றுவது எழுத்து வேலையைக் குறைப்பதாகாது; நேர்மாறாக அவ்வேலையை அதிகப் படுத்துவதாகும். அதனால்தான் சுருக்கமாகச் சொல்லுவதற்கேற்ற செய்யுள் நடையை நமது பண்டையோர் மேற்கொண்டார்கள் போலும்.

இன்னொரு காரணமும் உண்டு அஃதென்னவென்றால், அக்காலத்தில் அச்சு யந்திரமும் அதன் பயனாகிய அச்சுப் புத்தகமும் இல்லாதபடியால், நூல்களைக் கற்கும் மாணவர் தாம் கற்கும் எல்லா நூல்களையும் மனப்பாடஞ் செய்திருக்க வேண்டிய அவசியம் ஏற்

8-ம் பக்கம் பார்க்க

பேராசிரியர் பேசுகிறார்

மேடைப் பேச்சும் - பத்திரிகைகளும்!

8

மக்கள் விரும்பும் அரசாங்கத்தில் போரும் பிணக்கும் மிளிருவதில்லை. மக்களின் ஒன்றித்த பாச உணர்ச்சியும் வளருகிறது. மக்கள் விரும்பாத அரசாங்கத்தை நோக்கித்தான் எதிர்ப்பும் போராட்டமும் வளருகிறது. ஒரு நாட்டில் உள்நாட்டுப் போர் வளருகிறது என்று சொன்னால், அந்நாட்டில் இயங்கும் அரசாங்கம் மக்களின் விருப்பத்தையும் சம்மதத்தையும் பெறவில்லை என்பதுதான் பொருள். நாட்டில் மிளிரும் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டமே அரசாங்கத்தின் நாடி நரம்புகள். நாடி நரம்புகளின் ஒத்துழைப்பு இன்றி இயங்கும் உடல் வளம் பெறுதலைப் போலவே மக்களின் ஒத்துழைப்பைக் கொள்ளாத அரசாங்கமும் நீடித்து இயங்குவதில்லை.

மக்கள் விரும்பும் அரசாங்கம் அமைப்பதிலே தான் எண்ணிறந்த தொல்லைகளைக் காணுகிறோம். தாயக மக்களின் பேரார்வத்தையும் ஒத்துழைப்பையும் எதிர்நோக்கித்தான் ஆங்காங்கே பொதுத்தேர்தல்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை படிக்காத பாமரர்களின் எண்ணிக்கை மிகவும் ஏராளம், தேர்தல் முறையையும் தேர்தலுக்கான நெறியையும் உணராத மக்கள் கூட்டமும், தேர்தல் உறுப்பினரும் தமிழகத்தில்தான் அதிகம் உள்ளனர்;

மக்களின் ஒத்துழைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் குழுவின் இயங்கு சக்தியில் இழிநிலை தோன்றுமாயின், ஒன்று மக்கள் அறியாதாராக இருக்க வேண்டும், இன்றேல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் நேர்மையற்றோராய் இருக்க வேண்டும், இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு ஒருநாள் மாலை கல்லூரி அரங்கில் சொற்பெருக்காற்றிய பொருளாதாரப் பேராசிரியர் தமிழகத்தைப் பற்றியும் கூடக் குறிப்பிட்டார். "தமிழர்களுக்குப் படிப்பு முறை மிகக்குறைவு; அரசாங்க இயங்கு முறையையும் தேர்தல் பொறுப்பையும் பெரிதும் உணராதவர்கள்; ஆகையால் அரசாங்க அமைச்சர் தேர்தலைப் பொதுத் தேர்தலாக நடத்துவதைவிட படித்தோருக்கு மட்டும்தான் வாக்கு முறை என்று வகுத்து படித்தவர்களே தேர்தலில் கலந்து கொள்ள அருகதை யுடையவர்கள் என்ற முறை வகுக்கப்பட வேண்டும்' என்ற கருத்தை அவர் தம் உரையில் வெளியிட்டார்,

படிப்பறிவு இல்லை என்பதற்காக உரிமையைப் பறிக்க வேண்டும் என்று கருதும் அந்த சுயநலக்கார பேராசிரியருக்கு என்ன பதில் நான் சொல்ல முடியும்! விரலுக் கிடையே ஏற்பட்ட புண்ணுக்காக கையையா வெட்டிவிட வேண்டும்! காலில் ஏற்பட்ட காயத்திற்காக உடலையே வெட்டிவிட வேண்டும் என்றுசொல்லும் வேதாந்திகளாக ஆகிவிட்டார்கள். அறிவு பெருகாத காரணத்தால் பிறப்புரிமையையே பறித்துவிடக் கருதும் மேதைகளும் தமிழ் நாட்டில் உள்ளனர். பொதுமக்களுக்கு அறிவு குறைவு என்பதற்காக உரிமையைப்பறித்துவிடக்கருதும் மேடைப் பேச்சாளரை; மேதைகள் என்று நான் கருதமாட்டேன். மக்களுக்கு அறிவு இல்லை என்பதற்காக உரிமையைப் பறிக்கும் காலமா இது! அப்படியே அறிவு வளர்ச்சியும் அரசியல் அனுபவமும் பெறாதவர்களுக்கு வாக்குரிமையும் அரசியல் பொறுப்புணர்ச்சியும் இல்லைஎன்று முடிவு கூறிவிட்டால் எப்பொழுதான் அவர்களுக்கு அறிவு பெருகுவது! தமிழ் நாட்டு மக்களும் சுவிட்ஜர்லாந்து மக்களைப் போல் அரசியல் அனுபவம் பொதுநோக்கின் அவசியத்தையும் உணரும் காலம் எது! தமிழ் நாட்டு மக்கள் அறிவு உணர்ச்சியை ஒரு சிறிதும் பெறவில்லை என்றே வைத்துக் கொள்வோம்; அப்போது இருந்தது போலவே எப்போதுமே தமிழர் பாமரமக்களாயும் கிணற்றுத் தவளைகளாயும் இருந்துவிடுவதாகவே வைத்துக் கொள்வோம். அப்படியானால் தமிழர் வாழ்நாள் முழுதும் பிறப்புரிமையை இழந்து ஆளும் கட்சிக்காரர்கள் அறநெறியோராயினும் கொடியோராயினும் அடிபணிந்தே இருக்க வேண்டுமா! என்ன கொடுமை இது! நாட்டில் மக்களாகப் பிறந்தவருக்கு வாக்குரிமை வேண்டாத கட்சிக்காரர்களைத் தமிழ் மண்ணிலேதான் காணுகிறேன்; எப்படித்தான் இதை வாய் திறந்து மெய்மறந்து அரங்குகளில் பேசுகிறார்களோ தெரியவில்லை. தமிழ் மண்ணில் பிறந்த கடைசி மனிதனுக்கும் வாக்குரிமையும் பொதுச்சங்க உரிமையும் மறுக்கப்படாமல் வழங்கும் காலம் வரவேண்டும்.

எந்த மனிதனும் தன்னுடைய உரிமையைப் பலியிட்டுவிடக் கூடாது. மனித உரிமை ஓர் உயிர்ப் பொருள், அரசாங்கம் பல அங்கங்களினால் பொறுத்தப்பட்ட ஓர் உடல் கூறுபாடு கையென்றும், காலென்றும். விழி என்றும் செவி என்றும். நுதல் என்றும் வாயென்றும் எத்தனையோ அங்க வகைகள் உடலுக்கு உள்ளதைப் போலவே எத்தனையோ பெயர்களையும் தொழில்களையும் கொண்டு இயங்கும் மக்களைக் கொண்டு அரசாங்க உடலும் இயங்குகிறது. உடலில்ஓடும் இரத்தம் வேண்டிய அளவுக்கு ஒவ்வொரு அங்கத்திற்கும் ஓடவேண்டும். அப்போதுதான் உடலின்று உயிர் நீங்காது பாதுகாக்க முடியும். பேச்சாளன் எவ்வளவோ பொருட் செறிவுடன் பேசுகிறான்; பேச்சைக் கேட்கக் கேட்கச் சுவைக்கிறது; இனிமையான மெல்லோசையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உள்ளத்தைக் கவருகிறான் என்பதற்காக அவன் குரலில் மனிதமனம் பெருமை கொள்வதில்லை; அதன் காரணமாகப் பொறுமை, கொண்டு தொண்டைக்கு வேண்டிய உமிழ் நீரை வாய் சுரந்து கொடுக்காமல் நின்றதும் இல்லை. எவ்வளவுதான் வெட்டுப்பட்ட கையானாலும் வைத்தியன் உதவியால் இணைத்து ஒட்டவைக்கப்படும் போது உடலெங்கும் ஓடும் இரத்த வெள்ளம் இழந்துபட வேண்டிய அந்த கைபாகத்திற்கும் விரைந்து சென்று பரவி அங்கங்களை இழக்காமல் பாதுகாக்க வேண்டிய இரத்த பாசத்தை பெரிதும் உணர்ந்துள்ளது.

மனித உடலில் உள்ள அங்க ஒன்றிப்பு மக்களிடையேயும் அவர்தம் அரசாங்கத்திடையேயும் மிளிர வேண்டும். அந்த ஒருநாள் உடனுக்குடன் மிளிர வேண்டும், மனித அங்க ஒன்றிப்பு அரசாங்கத்திடையே மட்டும் காணப்படவில்லை; அங்கத்தைக் காக்க வேண்டிய இதய உணர்ச்சி உடலுக்குண்டு; ஆனால் அரசாங்கத்திற்குத்தான் இல்லை. மக்களுக்கும் வாக்குரிமையா என்று எண்ணும் எண்ணமும், அதனை வெளிப்படையாக மேடைகளில் பேசும் பேச்சுமே இந்த பொறுமை எண்ணத்திற்குப் போதிய சான்று.

மக்கள் இப்போதுதான் அறிவுப் பாதைக்குத் தள்ளாடித் தள்ளாடிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. அரசாங்கம் வளர்க்க இயலாத அறிவை மக்களே பெருக்கிக் கொள்ளுகிறார்கள். நாடெங்கும் பொதுமேடைகளும் நாகரீகமான பத்திரிகைகளும் வெகுவாகப் பரவி விட்டன. வருவாய் குன்றினாலும் பத்திரிகையை வாங்கிப் படிப்பதற்கென பணம் ஒதுக்கி வைக்கும் நல்ல பழக்கமும் அறிவும் செறிவும் மிக்க சொற்பொழிவுகளைக் கேட்க எட்டு மைல், பத்து மைல்களெல்லாம் கடந்து சென்று கேட்கும் ஆசையும் நாட்டில் வெகுவாகப் பரவிவிட்டது. தமிழ் உணர்ச்சியை ஊட்டும் ஏடுகளும் ஒன்றுபட்ட சமுதாய அவசியத்தை வலியுறுத்தும் ஏடுகளும், உயர்வு தாழ்வு வேற்றுமைகளைப் பெரிதும் எதிர்த்துத் தாக்கி ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உண்மையை வலியுறுத்தும் ஏடுகளும் நாட்டில் அதிக அளவுக்கு பயிலப்படக்கூடிய காலமிது.

அப்போதெல்லாம் குறிப்பிட்ட இனத்தாரும் தொழில் நடத்துவோரும்தான் பத்திரிகையை இயக்குவிக்க முடியும் என்ற எண்ணம் பரவியிருந்ததுண்டு; ஆனால் இப்போதோ புதுமைப் பாதையில் மக்களை இயக்கிச் செல்லும் ஏடுகளே பெரிதும் போற்றப்படுகிறது. அந்தப் பத்திரிகைகளும் நாட்டில் ஏராளமாக விற்பனையாக முடியும் என்ற உண்மையை வலியுறுத்தும் காலம் இதுதான். ஆனால் இது போதாது என்றுதான் சொல்லுவேன், தாய் நாடு தனித்தியங்க வேண்டிய அவசியத்தையும், தமிழ்மொழி பாதுகாக்கபட வேண்டியவிருப்பத்தையும், உயர்வு தாழ்வு ஒழிந்துபட வேண்டிய அவசியத்தையும் ஒன்றுபட்ட சமுதாயம் மிளிர வேண்டிய விருப்பத்தையும் வலியுறுத்தும் பத்திரிகை மட்டும்தான்நிலவமுடியும் என்றகாலம்வரவேண்டும்,

அப்போது உயர்வு தாழ்வு கருதும் பத்திரிகைகள் வளர இயலாது. நாட்டில் உள்ள உண்மையான செய்திகளை மறைத்து எழுதும் போலிப் பத்திரிகைகளுக்கும் மதிப்பு குறையும், சமுதாய வளர்ச்சியில் அக்கரை உள்ள பத்திரிகைகளையே மக்கள் விரும்பிப் படிக்கக் கூடிய காலமும் விரைவில் வரும். இந்த ஒரு ஒப்பற்ற பாடத்தை மக்கள் பெரிதும் கற்றுக்கொண்டே வருகிறார்கள்.

அதே போலத்தான் பொதுமேடைகளும் கூட மேடைப் பேச்சே கூடாது என்று சொல்லும் வேதாந்திகளும் கூட பேசிப் பேசித்தான் தமிழர்கள் முன்னுக்கு வந்தோம் என்ற உண்மையை பெரிதும் உணர்ந்து ஒத்துக்கொள்கிறார்கள். மேடைப் பேச்சுக்கள் அனைத்தும் சொற்சுவையும் பொருட் செறிவும் நிரம்பியவைகள் என்று நான் வாதிடவில்லை. ஆடம்பரமான மேடைப் பிரசங்கிகளுக்கும் பொதுமேடைகளில் இடம் கிட்டிவிடுவதுண்டு. அவர்களுடைய உரையைக் கேட்கவும் அதற்கிசைந்து ஆட்டு மந்தைக் கூட்டமாகக்கூடி கை தட்டவும் ஆட்கள் நிறைய உண்டு! மேடைப் பேச்சாளர்கள் அத்தனை பேருமே நெறியோடு இயங்கக் கூடியவர்கள் என்பதல்ல என் கருத்து, போலிப் பிரசங்கிகளும் போலிக் கொள்கைப் பேச்சுக்களும் கூட பொது அரங்குகளில் நிலவுவதுண்டு. அவைகளெல்லாம் காலவெள்ளத்தில் அழிந்துபடக் கூடியவைகள், வீண்கேளிக்கையைக் கருதித்தான் அப்படிப்பட்ட பிரசங்கங்களைக் கேட்கிறார்கள்.

நல்ல மேடைப் பிரசங்கத்திற்கும் ஆபாசக் கூட்டத்திற்கும் கூடியிருக்கும் கூட்டத்திலிருந்தே வேறுபாட்டை உணர்ந்து கொள்ளலாம். அப்போதெல்லாம் கருத்துச்செறிவு இல்லாத பொது மேடைகளுக்கு கூட்டம் அதிகம் வருவதுண்டு, ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பேசுவதையும், ஒரு கட்சியை மற்றோர் கட்சி தூற்றிப்பேசுவதையும், உரக்கப் பேசுவதையுமே சிறந்த மேடைப் பிரசங்கங்கள் என்று எண்ணியிருந்த காலம் மறைந்துவிட்டது.

சமுதாய வளர்ச்சியிலும் அரசியலில் நல்லெண்ணமும் மிக்க சொற்பொழிகளைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் இப்போது வெகுவாகத் தமிழகத்தில் மலர்ந்துவிட்டது. தாய்மைப் பற்றை வளர்க்கக் கூடிய பேச்சுகளை மக்கள் சுவையாக ரசிக்கிறார்கள் சிந்தனையைக்கிளறி குருதியில் கொந்தளிப்பை ஊட்டக்கூடிய பேச்சுக்களைக் நிதானமாக கேட்கக் கற்றுக்கொண்டார்கள், அதிகமாக சொல்ல வேண்டுமானால், பேசும் பேச்சிலிருந்து பேச்சாளரை எடை போடவும் கூட தமிழர்கள் பயின்று விட்டார்கள்.

பத்திரிகைத் துறையிலும், பொதுமேடைப் பேச்சிலும் தமிழ்நாடு இப்போது ஒப்பற்ற மறுமலர்ச்சிப் பாதையில் இயங்கி வருகிறது என்றே சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதின்மூலம் ஆபாசமான கேளிக்கைப் பத்திரிகைகளும், வசைமொழிப் பிரசங்கங்களும் ஒழிந்து விட்டன என்றும் எண்ணவில்லை; அவைகளெல்லாம் நாகரீக உலகில் இற்றுப்போய் விடும் என்ற நம்பிக்கையையே நினைவுபடுத்திக் கொள்ளுகிறேன்.

தாய் நாட்டின் உரிமையை எழுதும் ஏடுகளையும் தமிழ் மொழியைப் பேணிக்காக்க முன்வரும் ஏடுகளையும் சமுதாயத்தில் வளரும் சாதிபேதத்தையும் ஆபாச நெறிகளை ஆகும் நெறியாகக் கொண்டு இயங்கும் எண்ணங்களை எதிர்க்கும் ஏடுகளையும், ஒன்றுபட்ட சமுதாய அமைப்பால் பொருளாதார ஏற்றத் தாழ்வை அகற்ற நினைக்கும் ஏடுகளையும் அரசியல் உரிமைக்குப் பாடுபடும் ஏடுகளையும்தான் நான் படிப்பேன் என்ற உறுதிமொழியை ஒவ்வொரு தமிழனும் கொண்டு அதன் வழியில் இயங்கினால் ஆபாசமான பத்திரிகைகள் வளர இயலாது.

பொது மேடைகளுக்கும் கூட இந்த உறுதிமொழி மிகவும் தேவைப்படுகிறதென்பேன். நாட்டில் வளரும் தீய எண்ணங்களைப் போக்கவோ அல்லது நல்ல வழிகளில் நாடு இயங்கவோ கூடும் கூட்டங்களுக்கே போவேன் என்ற உறுதிமொழி எடுத்துக்கொண்டால் நல்ல மேடைப் பேச்சாளர்கள் மேலும் நாடெங்கும் திகழ முடியும். சிந்தனையாளர்களின் கூட்டங்களுக்கு செல்வதிலும் மாநாடுகளில் பங்கு கொள்வதிலும் சிறிதும் தளராத மன உணர்ச்சி வேண்டும்.

எனவே பொதுமேடைகளாலும் பத்திரிகைப் படிப்பாலும் மக்கள் அறிவைப் பெருக்கும் காலம் இக்காலம் என்றுதான் இயம்ப வேண்டும். இந்த நல்ல பணியைப் புரியும் மேதைகள் நாட்டில் திகழ்வதால்தான் மக்கள் மனவளமும் பெறுகிறார்கள், இந்த வழிகளை மேலும் கையாண்டு மக்களுக்கு மனவளத்தை பெருக்குவதன் காரணமாக நாடெங்கும் உயர்தரமான பொதுமேடைகளும் பத்திரிகைகளும் வளர வேண்டும். இம்முறையால்தான் மக்கள் அறிவுணர்ச்சி பெற இயல்கிறது. நாட்டில் பிறந்த மக்களை கூட்டத்தைக் கல்முட்டாக எண்ணி வாக்குரிமை தரமறுக்கும் வேதாந்திகள் இந்த வழியில் மக்களை முன்னேற்ற வேண்டிய அவசியத்தை பெரிதும் உணரவேண்டும், இந்த வழிகளைக் கையாண்டு மக்களுக்கு அறிவுணர்ச்சி ஊட்டும் மறுமலர்ச்சிக்காரர்களின் சேவையையும் நாட்டு மக்களும் ஞானிகளும் உணர வேண்டாமா! —(தொடரும்)

—வி. சுந்தரராசு

சுவைத்துப் பாரீர்!

சாருவாகர் தீர்ப்பு!

சென்ற வாரம் சாருவாகர், பெண்ணின் பெருமையைப் பேணியதைப் படித்தோம். இப்போது அவரது நல்ல தீர்ப்பையுங் காணுவோம்!

இளம் மனைவியை வீட்டில் விட்டுப் போர்க்களம் புகுந்தான் போர் வீரனொருவன்.

நெடு நாட்களுக்குப் பின் வீடு திரும்பிய அவ்வீரன்; தன் மனைவி பஞ்சாயத்தார் முன்னிலையில் 'குற்றவாளி'யாக நிறுத்தப் பட்டிருப்பதை யுணர்ந்து பஞ்சாய்த்து மன்றத்திற்கு விரைந்தான்! கற்பழிந்தப் பழிக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தாள் அவ்னது மனைவி!

கற்பு இழந்ததை ஒப்புக் கொண்டதோடு, தான் கர்ப்பிணி என்றும் துணிந்து உண்மையை உரைத்து விட்டாள்.

புறக் காரணங்களால் கற்பிழந்தவர்களுக்கு இச்சபையில் மன்னிப்பு உண்டு! நீ விரும்பினால், அத்தகையப் புறக்காரணங்கள் நிமித்தந்தான், நீ கற்பிழந்தாய் என்பதாக ஒப்புக் கொண்டு விடுதலை பெறலாம்! என்ன கூறுகிறாய்? என்று பஞ்சாயத்துத் தலைவர் கேட்டார் அம்மங்கையை.

புறக் காரணங்கள் என்னை ஒன்றுஞ் செய்துவிட முடியாது? விஸ்வாமித்திரராலேயே கட்டுப்படுத்த முடியாது போன அத்தகைய காமஇச்சை என்னையும் வாட்டியது! கட்டுப்படுத்த முடியாததொரு துடிப்பினால் எனது காம இச்சையை, நெடுநாட்களாக என்னை விட்டுப் பிரிந்த கணவனுமில்லாது தவித்து, மாற்றானிடம் வலியப் புணர்ந்து இச்சை தவிர்த்துக் கொண்டேன்! உயிருக்கு அஞ்சி பொய்யுரைக்க விரும்பவுமில்லை! என்றுங் கூறிவிட்டாள்.

ஆகா! இவளன்றோ வீரப்பெண்மணி! உண்மையின் வடிவம்! இவள் உண்மையாகவே எனக்குப் பிறந்தப் பெண்ணாய் இருக்கக்கூடாதா? என்ன பெருமை கொள்வேன்! என வியப்புற்றுப் போனார் சாருவாகர்!

சாருவாகர் பஞ்சாயத்துக் குழுவில் ஒரு உறுப்பினர்!

இந்தப் பெண், தானாகவே கற்பழித்துக்கொண்டது மன்னிக்க முடியாத குற்றம்! அதற்குத் தண்டனை: அவளது மெய்க் கணவனே அவள் தலையை வெட்டி வீழ்த்த வேண்டுமெனப் பஞ்சாயத்துத் தலைவர்கூறி தீர்ப்புக்கு விட்டார்! அதிக எண்ணிக்கையின் பலத்தோடு தீர்ப்பு ஊர்ஜிதமாக்கப் பட்டுவிட்டது!

இங்கேதான் எழுந்தார் சாருவாகர்!

சபையோர்களே! உங்கள் தீர்ப்பு சரியல்ல! இந்தப் பெண் குற்றமற்றவள்! கட்டுக்கடங்காத இச்சையைக் கணவன் பக்கமிருந்தால் பூர்த்தி செய்து கொண்டிருப்பாள்! போர்க்களம் புகுந்த கணவனின் வருகை நீண்டு போய்விட்டது! இச்சையின் வலிமை இவளது கட்டுப்படுத்துந் தன்மையை மங்கச் செய்துவிட்டது! நிலை தடுமாறினாள்! மாற்றானை நாடினாள், கணவன் அச்சமயம் இருந்திருப்பானேயானால் மாற்றான் நினைவிற்கே ஏது இருந்திருக்காது! எனவே அவள் செய்தது குற்றமாகாது. தற்செயல் எனக் கொள்ள வேண்டும். அதோடு மன்னிக்கும் குற்றமெனவும் நாம் கருத வேண்டும். அவ்வண்ணமே இவளை விடுதலை செய்வதுதான் இச்சபைக்கு அழகு! என்று வாதாடினார் சாருவாகர்.

சாருவாகரையும், அவரது கொள்கைகளையும் மக்கள் நன்கறிவர். சாருவாகர் தீர்ப்பையே மக்களும் ஆமோதித்தனர். வற்புறுத்தினர்.

சபையின் பெருவாரி உறுப்பினர்கள் சாருவாகர் வாதத்தை ஏற்க மறுத்துவிட்டனர்!

பெண்ணின் தலை உருள வேண்டியதுதான்! அதுவும் அவளது கணவன் கையால்!

நினைத்தான் கணவன்! பஞ்சாயத்தார் தீர்ப்பைப் புறக்கணிக்க முடியாது! என் மனைவி செய்ததை நான் குற்றமாக ஏற்கவில்லை! போரின் நிமித்தம் எனது மனைவியை விட்டுப் பிரிந்திருந்த அத்தனை நாட்களில் எத்தனை நாட்கள் நான் எங்கெந்த பெண்களிடம் கலந்துறவாடினேன்! என்னை விட உண்மையை ஒளிவு மறைவு இன்றி, விளைவுக்கும் அஞ்சாமல், ஒப்புக்கொள்ளும் என் மனைவி குற்றமுடையவள்தானா? நான் கொல்லத்தான் வேண்டுமா? என ஏங்குகிறான்! கணவன்.

மக்கள் மன்றாடுகிறார்கள் அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்ற!

வேறு சிலர் பெண்தான் குற்றமுடையவள்! அவள் வயிற்றிலிருக்கும் சிசு! என்ன குற்றம் செய்தது? அச்சிசுவை வேண்டியாவது அவள் உயிர் காப்பாற்றப்படவேண்டும்! என்று வாதாடுகிறார்கள்.

பஞ்சாயத்து தீர்ப்பு தீர்ப்புதான்!

அய்யா! எனது மனைவியை என் கையால் வெட்டாது அவளை எனது மனைவி இல்லை என்றாவது சொல்லி விரட்டிவிடுகிறேன்! அவள் உயிர் தப்பியாவது பிழைத்துப்போகட்டும்! என்றுஞ் சொல்லிப் பார்க்கிறான் கணவன்.

முடியாது!...வெட்டு!...தீர்ப்பு!...உத்தரவு!

கணவனது தாயார் அவனிடங் கூறுகிறாள்: அப்பா மகனே! கட்டிய மனைவியை கைவிட்டுத் தவிக்க வைப்பதைவிட உன் கையாலேயே வெட்டி விடுவது நல்லது! பஞ்சாயத்தை மீறி நம்மால் செய்யவல்லது எது?

தடுமாறும் கணவனுக்குப் போதையூட்டும் கஞ்சா கொடுக்க அவன் மனைவியின் கழுத்தை வெட்டத் தூக்கி விட்டான் கொடுவாளை!

நிறுத்து! நிறுத்து!!...என்ன பஞ்சாயத்து? என்ன தீர்ப்பு?! என அதட்டிக் கேட்டு கர்ப்பிணிப் பெண்ணை கைகொடுத்து மீட்டிவிட்டாள் ஓர் பாட்டி! என்ன ஆச்சரியம்!

ஏ! பஞ்சாயத்துத் தலைவனே! பஞ்சாயத்தார்களே! கேளுங்கள் என் கதையை!

எழுபது வருடங்களுக்கு முன்பு எனக்கு வயது பதினேழாகும்போது எனது தோழியர்களுடன் அண்டையூர் கோயிலுக்குக் கேளிக்கைப் பார்க்கச் சென்றோம். ஆடினோம்! பாடினோம்! பொழுதும் சாய்ந்தது. அலுப்பால் அயர்ந்து தூங்கிவிட்டேன். உடன் வந்தத் தோழியர் என்னைவிட்டுப் பிரிந்து ஊர் திரும்பிவிட்டார்கள்! நான் உறங்கிய வேளையில் இரு அயோக்கியர்கள் என்னை அணுகி யிருக்கிறார்கள். அதோடு வலியப் புணர்ந்தும் விட்டார்கள். கண் விழித்தேன்! மீட்பதற்குச் சக்தியின்றிச் சகித்தேன்! ஓடினார்கள்! எழுந்தேன்! ஓடினேன்! தந்தையிடங் கூறினேன்! தந்தை பயங்கர மனிதர்! அயோக்கியர் இருவரும் அவர் கையில் சிக்குண்டனர்! நொறுக்கினார்! அதோடு என்னைக் கற்பழித்த அந்த அயோக்கியனே எனது கணவனாகவும் இருக்கும்படி செய்தார்! கெட்டோம்! கெடுத்தவனையே கணவனாகக் கொண்டுவிட்டால் 'கெட்டவள்' என்ற பட்டம் எனக்கு ஏது? அந்த அயோக்கியர்களில் மற்றவன் எனது தந்தை உயிர் துறக்கும் வரையில் இக்கிராமத்திலேயே தலை காட்டாமலிருந்து இன்று வந்துவிட்டான்! பஞ்சாயத்துத் தலைவனும்! தீர்ப்பு கூறுகிறானும்! எங்கே அவன்!—பார்த்தீர்களா? கதை சொல்லி முடிப்பதற்குள் அத்தலைவனும் அவன் வால்பிடி தோழர்களும் ஓடி மறைந்தார்கள்!

சாருவாகரே உமது தீர்ப்பே நல்ல தீர்ப்பு! நீரே எமது தலைவன்! உமது தீர்ப்பை எங்கள் முன்னிலையில் அமல் நடத்துங்கள்! என்று வேண்டி நின்றாள் அருமைப் பாட்டி!

சாருவாகர் கணவனைக் கூப்பிட்டு அப்பா! இப்போது உன் மனைவியை நீ ஏற்றுக் கொள்ளச் சம்மதந்தானே? என்று கேட்டார்.

தாராளமாக ஏற்றுக் கொள்கிறேன்! அதோடு அவளுக்குப் பிறக்கும் குழந்தையையும் என்னுடையதாகவே போற்றி வளர்ப்பேன்!

ஈருயிரைக் காப்பாற்றிய அருமைப் பாட்டி! வாழ்க!

குடும்பத்திற்கே நல்ல தீர்ப்பு அளித்த சாருவாகர்! நீடூழி வாழ்க! என வாழ்த்தினர் மக்கள்.

*

சிறுபிள்ளைத்தனம் எது?

ஆழாக்கு பாலை அப்படியே ஊற்றிவிட்டானே! இங்கே வாடா தடிப்பயலே!... சாத்து! சாத்து!! சாத்து!!!...இனி ஜாக்கிரதையா கொண்டு வருகிறாயா?...கொண்டு வ...ர்...ரே...ம்...பா! பாலை ஊற்றிவிட்டு அப்பாகிட்டே பையன் பட்டபாடு பையனுக்கும், பக்கமிருந்தவர்களுக்குந்தான் தெரியும்.

அடி ஆத்தே! இதென்னடி சீமையிலில்லா குழந்தை—எனக்குன்னு வந்து பிறந்ததே! நம்ப சின்ன அத்தான் விருந்துக்கு வந்தாரேன்னு இப்போதான் நெருப்பாட்டும் இரண்டணா கொடுத்து நெய் வாங்கிகிட்டு வந்து வைச்சா தபக்கின்னு அப்படியே சாச்சி பூட்டுதம்மா! காரை தரையாயிருந்தாலும் வழிச்சி எடுத்துக்கலாம்! நம்ம அரமனைதான் மண்தரை ஆச்சே! அப்படியே உறிஞ்சிகிட்டுது மண்ணு! இரண்டணா யார் தின்னப்பாடு! வாங்கு! வாங்கு!'...வ்வா!... வ்வா!...அடி குழந்தை என்னத்தடி கண்டது? அதைப்போயி மாட்டை அடிக்கிறாப் போல அடிக்கிறே!

பாலை ஊற்றி விட்ட பையனும், நெய்யை ஊற்றிவிட்ட பச்சிளங்குழந்தையும் தக்க 'பரிசில்கள்' பெற்றன.

ஆனால் "அபிஷேகம்" என்கிற பெயரால் குடங்குடமாகப் பாலைக் கல்லின் தலையில் ஊற்றுகிறவர்களையும், 'யாகம்' வளர்த்துகிறோம். என்கிற பெயரில் குடம் குடமாக நெய்யை ஊற்றி எரிப்பவர்களையும்—யார் சாத்து! சாத்து!! என்று சாத்துகிறது! யார் வாங்கு வாங்கு என்று வாங்குகிறது?

தவறியும், அறியாமலும், ஊற்றிவிட்டால் உதை!

தெரிந்தே, குருட்டுத்தனத்தாலும் மூடநம்பிக்கையாலும், மௌடீகப்போக்கினாலும் ஊற்றிவிட்டால்? ஊற்றுகிறவர்கள் மடையர்களல்ல! மடாதிபதிகள்! தடியர்களல்ல தம்பிரான்கள்! குருடர்களல்ல குருக்கள்! திருடர்களல்ல தீட்சதர்கள்!

ஏழைக்குக் கொடுக்காமல் எரிக்கிறாங்

வள்ளியில் நெய்யையூற்றி—தொலைந்தால் தொலையட்டுமென்றால் — 'ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே' என்றதுபோல் — எரிமூட்டுகிறான் — ஜுவாலை வான்முகட்டி—அஜ்ஜுவாலையோடு இறங்கி வரவேண்டுமாம் எம்பெருமான்!

ஜுவாலை வான்முட்டப்போய் பந்தலையே கொளுத்தி விட்டது! பக்கமிருந்த நாற்பது ஓலை அகத்துக் குடிசைகளும் வெந்து சாம்பலாயின! மேமுதல்தேதி வாதப்பள்ளிக்கு நேர்ந்த கதி இது! என்று மரக்காணூர் செய்தி கூறுகிறது.

"இராமர் பிரதிஷ்டை" உற்சவமாம் 'ஹோமம்' வளர்த்தினர்களாம்! ஹோமகுண்டத்திலிருந்த நெருப்பு பந்தலுக்குத் தாவியது! பக்கத்து நாற்பது குடிசையையும் தீ "பிரதிஷ்டை" செய்து சாம்பலாக்கி ஓய்ந்தது!

இதெல்லாம் என்ன விளையாட்டு? இவைபோன்ற செய்கைதான் அசல் கிறுகின் ஈத்தனம்! இவைகளை இன்னும் அனுமதிப்பதென்பது—மக்கள் இன்னும் மௌடீகச் சாக்கடையிலிருந்து எழுந்து வெளிவரவில்லை யென்றுதான் கூறுகிறது! என் அருமைநாடே என்றுதான் திருந்துவாயோ?

*

ராஜினமா எதிரொலி !

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனப் பொதுக் காரியதரிசிப் பதவியை டாக்டர். அம்பேத்காரின் போக்கு பிடிக்கவில்லை என்ற காரணங்களைக் கூறி தோழர். ராஜ் போஜ் ராஜினமா செய்ததை 'திராவிடன்' ஏட்டில் படித்தோம்.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் தொடர்பை என்று அறுத்துக் கொண்டாரோ அன்றே அவர் தாழ்ந்த இன மக்களின் பிரதிநிதி என்கிற நிலையும் அற்றுப் போனார்! அவரைத் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதியாகத்தான் நாங்கள் தேர்ந்தெடுத்து தில்லி பாராளுமன்றத்திற்கு அனுப்பினோம். இப்போது அவரை நாங்கள் எப்படி இன்னும் எங்கள் பிரதிநிதி என்று கூறுவது? ஆகவே அவர் பொதுக் காரியதரிசி பதவியை ராஜினமா செய்ததைப் போல் தில்லி பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினமா செய்யட்டும் என்று கோரி பம்பாய் மாகாணத் தாழ்த்தப்பட்டோர் சங்கம் மே முதல் தேதி கூட்டம் போட்டு ஓர் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது.

அவர் காங்கிரசில் சேர .வேண்டும் என்ற நினைப்பு இன்னும் யோசனையிலேயே இருக்கிறதோ என்னவோ?

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை என்ன செய்யப் போகிறார்? பொறுத்திருந்து பார்க்க வேண்டிய சங்கதிதான்!

*

தாம்புக் கயிறு !

பல ஊர்களில் கிணற்று நீர் எடுப்பதென்றால், ஆழ்கடலில் மூச்சடக்கி முத்துக் குளித்தல் மாதிரி! அவ்வளவு ஆழத்தில் இருக்கும் தண்ணீர்! வட ஆற்காடு வட்டத்தில் கிணறுகளெல்லாம் அப்படித்தான்.

சுமார் எட்டு ஆள் ஆழத்திற்கு மேலிருக்கும். அதற்கு உபயோகப்படுத்தும் தாம்பு கயிறும் அத்தனை ஆழத்திற்கு மேல் நீண்டு இருக்கும்.

அப்படி நீண்டிருக்கும் தாம்புக் கயிற்றைத்தான் கண்டிருக்கிறோம். ஆனால் அந்த தாம்புக் கயிறு நீளத்திற்குச் சரியான பாம்பைக் கண்டிருக்கிறோமா?

சென்னை ராஜாஜி மண்டபத்தில் 'புற்று நோய் வாரம்' கொண்டாடினார்கள். அப்புற்று நோயின் கொடுமையையும், ஆட்கொல்லித் தன்மையையும் தெற்றென விளக்கிக் காட்ட ஒருபெரிய 'மாதிரி' மலைப்பாம்பு ஒன்று செய்து முகப்பில் இந்த நீளத்திலிருந்து அந்த நீளத்திற்குத் தேர் வடம் மாதிரி வைத்திருந்தார்கள். அதனுடைய நீளத்தைக் கண்ணாலேயே தோராயமாக அளந்து பார்த்ததில் 25 அடிக்கு மேல் இருக்காதென்று தோன்றிற்று. வட ஆற்காடு வட்டக் கிணற்றுத் தாம்புக் கயிறின் நீளத்திற்குப் பாதியினுங் குறைவுதான் என்று சொல்லலாம்,

ஆனால் நீளத்தில் தாம்புக் கயிறையும் மிஞ்சிவிடும் போலிருக்கிறது — சமீபத்தில் மலையாளம் கொல்லத்திற்கு அடுத்த ஆதிச்சநல்லூரில் அடித்துப் போட்ட ஓர் பாம்பின் நீளம்! அதிசயம் ஆனால் உண்மைதானும்!

நாற்பதடிக்கு மேலான நீளமாம்! அடித்த பிறகு அதை அறுத்துப் பார்த்ததில் உள்ளே ஓரடி நீளமுள்ள ஒரு குட்டிப் பாம்பும், அதோடு 30 குஞ்சுகளும் கண்டெடுக்கப் பட்டனவாம்.

அடேயப்பா! இவ்வளவு நீளமுள்ள பாம்பை என் வாழ்நாளில் இதுவரை நான் கண்டதே இல்லை என வயது நிரம்பியவர்களே வியந்து பேசினார்களாம்!

*

ரிக்ஷா—பெண்கள் !

ஒரு பெண்மணி! ஓலைக்கடை வியாபாரி! பணம் பெருத்தவர்! உடலும் பருத்தவர்! என்னைப் போல் எட்டு ஆள் சேர்த்தால் அந்த அம்மாள் ஓர் ஆள்! அப்போது எனது உடல் கனத்தையும் அந்த அம்மாள் கனத்தையும் நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம்!

அப்பெண்மணி ரிக்ஷாவில் வீற்றிருந்தார். காலடியில் கனத்த ஓலைக் கூடையில் நிறைய வாளைமீன்! அதையும் சேர்த்து சளிக்கும் ஓர்தோழர்; உடலிலுள்ள எலும்பை எண்ணி காட்டி விடலாம்! வியர்வையால் உடல் முழுதும் நனைந்து வியர்வைச் சொட்டச் சொட்ட இழுத்துச் சென்றார்!

அக்காட்சியைக் கண்ட எனது நடை நின்றது. கண்பார்வை அந்த ரிக்ஷாவைத் தொடர, சிந்தனையும் நடை போட்டது.

என்ன இருந்தாலும் பெண்ணை ஓர் ஆண் ரிக்ஷாவில் ஏற்றி இழுத்துச் செல்வது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை! ஏன்? பெண்கள் ரிக்ஷா இழுத்தாலென்ன? சீ! சீ! அது தப்பான எண்ணம்! பெண் அழகின் பொக்கிஷம்! அன்பின் உறைவிடம்! ஆக்கத்தின் கர்த்தா! மென்மையின் வடிவு! எனவே பெண் ரிக்ஷா இழுக்கவாவது? இருந்தாலும் ஒரு பருத்த அம்மையாரை ஒரு சிறுத்த உருவம் சுமந்து இழுத்துச் செல்வது என்னமோ 'கண்றாவிக்' காட்சியாக இருக்கிறது!

சிந்தனைக்கு முற்றுப்புள்ளி! வழி நடந்தேன்!

ஏன் பெண்களாகிய நாங்கள் ரிக்ஷா இழுக்க முடியாதா? என்று கேட்பதைப் போல இருக்கிறது ஹைதராபாத்தில் நடக்கும் நிகழ்ச்சி!

பிழைக்க வேறு வழியின்றி தவித்த ஏழைப் பெண்மணிகள் இரவு வேளைகளில் ஹைதராபாத் நகரத்தில் 'சைகிள்—ரிக்ஷா' ஓட்டிப் பிழைப்பதில் முனைந்திருக்கிறார்களாம்!

இரவு இரண்டாவது சினிமா காட்சிக்குப் பிறகு தத்தம் 'சைகிள்-ரிக்ஷா'க்களில் தாய்மார்களை உட்கார வைத்து சினிமா கொட்டகையிலிருந்து அவரவர் வீடுகளுக்கு ஓட்டிச் செல்லுகிறார்களாம் இரு தோழியர்கள்! ஆண்களை ஏற்றிச் செல்லாமலிருந்தவரை க்ஷேமந்தான்!

ஆனால் பெண்கள் ரிக்ஷா ஓட்டுவது சட்டப்படி அனுமதிக்கப்படவில்லை! எனவே அங்கு சட்டத்தை ஏமாற்றித்தான் காரியம் நடைபெறுகிறதாம்! அதற்காக வேண்டிப் பெண்கள் ஆண் உடையில் காட்சி யளித்துப் பிழைப்பை நடத்துகிறார்களாம்!

சில மாதங்களுக்கு முன்புகூட அவ்வூர் போலீசு ஓர் இளநங்கை ஆண் உடையில் இரவு வேளைகளில் ரிக்ஷா ஓட்டி வந்ததைக் கண்டுபிடித்து தண்டனையும் அளித்ததாகத் தெரிகிறது.

மனிதனை மனிதன் சுமந்து இழுத்துச் செல்வது எப்போதுதான் கைவிடப்படும்? ஏழ்மை இருக்கிற இடந் தெரியாமல் ஓடினால்தான்!

—டபிள்யூ. பி. டி. எழிலன்

●

திராவிடநாட்டு கல்வி தொடர்ச்சி...

பட்டிருந்தது மனப்பாடம் பண்ணுவதற்கு வசன நடை ஏற்றதன்று; செய்யுள் நடைதான் சிறந்தது. இக்காரணத்தினாலும், பண்டைத் தமிழர் நூல் இயற்றுவதற்குச் செய்யுள் நடையை மேற்கொண்டு வசன நடையைக் கைவிட்டனர் என்று நினைக்க இடமுண்டாகிறது.

இக்காலத்துள்ளது போல அக்காலத்தில் சுலபமாக எழுதுவதற்கேற்ற எழுது கருவிகளும் சாதனங்களும் இல்லாதபடியினாலே எழுத்து வேலையைச் சுருக்கிக் கொள்வதற்காகப பண்டையாசிரியர் செய்யுள் நடையை மேற்கொண்டனர் என்று சொன்னோம். இக்காரணம் பற்றியே உரையாசிரியர் கூட சில இடங்களில் "இதனை வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்று எழுதிப் போந்தனர் என்று நினைக்கிறோம்.

குறிப்புரை அரும்பதவுரை போன்ற சுருக்கமான உரைகளைப் பண்டையோர் எழுதத் துணிந்ததற்குக் காரணமும் எழுது கருவி சாதனங்கள் இல்லாக் குறையென்றே தோன்றுகிறது. தமிழ்ப் பண்ணையின் முடிமணியாக விளங்கும் சிலப்பதிகாரத்திற்கு உரை யெழுதிய ஆசிரியர் அடியார்க்கு நல்லார் மேற்படி நூற்பதிகத்தின் முதல் இரண்டடிகளுக்கு மட்டும் மிக விரிவான உரை எழுதிய பின்னர் "இனிப் பதிகச் செய்யுளுள் முதலிரடியும் போல யாண்டுப் விரியாதது உரை பெருகுமென்பதைக் கருதி எனக்கொள்க" என எழுதி, மற்ற அடிகளுக்கு உரையை சுருக்கிக் கொண்டதும் இங்கு நோக்கத் தக்கது. உரை எழுதுவதற்கென்றே முற்பட்டவர் பின் உரை பெருகுமென்றுக் கருதி சுருக்கிக் கொண்டது. சுலபமாக எழுதுவதற்கு ஏற்ற கருவிகள் அக்காலத்து இல்லாமையாலென்க.

இக்காலத்துள்ளது போன்று வசதியான எழுது கருவிகள் அக்காலத்து இருந்திருந்தால், இவ்வாறு உரையை சுருக்கிக் கொண்டிருக்கமாட்டாரன்றோ? ஆகவே பண்டைத் தமிழர் வசன நூல் இயற்றாதது அக்காலத்தில் வசதியான எழுது கருவிகளும் அச்சு யந்திரமும் இல்லாத காரணம் பற்றியே என்பது விளங்குகிறது" (மயிலை சீனி வேங்கடசாமி, கிருஸ்துவமும் 'தமிழும்' என்னும் நூலில்). இவ்வாறே மற்ற ஆசிரியர்களும் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

பண்டைய நூல்களுக்கு உரையெழுதிய இடைக்கால உரையாசிரியர்கள் வசன நடையைக் கையாண்டுள்ளனர் என்றாலும் அவர்களாலும் தனித் தமிழ் வசன நூல்கள் எதுவும் இயற்றப்படவில்லை, ஆகவே பண்டைக் காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி தனி வசன நூல்கள் இயற்றப்படவில்லை என்பது தெளிவாகும்.

ஆயினும் பண்டைக் காலத்தில் செய்யுளும் வசனமும் கலந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் நூல்கள் இயற்றப்பட்டு வந்தன எனத் தெரிகிறது,

"தொன்மை தானே
உரை யொடு புணர்ந்த பழமை
[மேற்றே'

என தொல்காப்பிய செய்யுளியலில் வரும் சூத்திரம் இவ்வுண்மையைத் தெரிவிக்கின்றது. இறந்துபட்ட பெருந்தேவனார் பாரதமும் தகடூர் யாத்திரையும் உரையிடைப்பட்டபாட்டுடைச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டுகளாக காட்டப்படும். நமக்கு உரையிடைப்பட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக கைக்குக் கிடைத்திருப்பது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் ஒன்றேயாகும்.

'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்
[யுள்
உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்.

எனசிலப்பதிகாரச் செய்யுளடிகள் பகருவதினின்றும் சிலப்பதிகாரமானது வசனமும் பாட்டும் கலந்த நூல் என்பதை அறியலாம்.

இவ்வாறெல்லாம் கூறியதனால் நவீன காலத்தில்தான் தனித் தமிழ் வசன நூல்கள் வளரத் தொடங்கின என்பதும் மேலை நாட்டுப் பாதிரிமார்களே இதற்கு தனித் தமிழ் வசன நூல்கள் வளர்ச்சியடைதற்குக் காரணமாக அமைந்தனர் என்பதும் தெரியவரும்.

—திராவிடப்பித்தன்

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி.

14

வடவர்கள் மத்தியில் வருணாச்சிரமமும் சாதிப் பாகுபாடும் என்றும்போல இன்றும் இருந்து வருகின்றன. திரு. காந்தியாரின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கை தென்னிந்தியாவில் வெற்றிபெற்ற அளவுக்கு கால்பங்கு கூட வடஇந்தியாவில் வெற்றி பெறவில்லை. இதற்குக் காரணம் அவர்களுடைய அற நூல் இலக்கியமே தவிர வேறில்லை. தனி மனிதனுடைய ஒழுக்கம், அன்பு, அருள், அறம் ஆகியவைபற்றி அவர்கள் கவலைப்படுவதும் இல்லை.

இதுகுறித்து திராவிட இயக்கத்தாரால் வெளியிடப்பட்ட பலவகை நூல்களிலும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராயப்பட்டிருப்பதால் இதனை இங்கு இம்மட்டோடு நிறுத்திக் கொண்டு வடவர்களின் பெண்மை—கற்பொழுக்கம் ஆகியவைபற்றி அவர்களுடைய இலக்கியங்கள் கூறுவதைக் காண்போம்.

தமிழ் இலக்கியங்களில் பெண்மை—கற்பொழுக்கம்பற்றிக் கூறும்போது, பெண்களுக்கு எத்தகைய இன்னல்கள் நேரிட்டபோதும் அவர்கள் தெய்வங்களை வணங்கக் கூடாதென்று கூறுகின்றன.

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

என்று கூறுகிறார் வள்ளுவர். இதற்குப் பொருள் கூறுவோரில் இருவகையினர் உள்ளனர்.

"கணவனையே கடவுளாக நினைத்து வணங்கி வழிபாடு செய்யும் கற்புடை மகளிர் வானத்தை நோக்கி 'பெய்' என்றால் உடனே மழை பெய்யும்" என்று பரிமேலழகர், மணக்குடவர் போன்ற பழைய உரையாசிரியர் கூறுவர்.

"கணவனையே கடவுளாக மதித்து ஒழுகும் கற்புடை மகளிர், தம் கணவனுக்கு பெய்யென்றால் பெய்யும் மழையைப் போன்றவராவார்" என்று பாரதிதாசன் போன்ற தற்கால உரையாசிரியர்கள் உலகியல் அறிவுக்கிணங்க உரை கூறுவர்.

இந்த இருவகை உரையாசிரியரும் கற்புடை மகளிர் கடவுள் வழிபாடு செய்ய வேண்டியதில்லை என்பதில் உடம்பாடு கொண்டவரே.

இதே குறளின் கருத்தை கலித்தொகை என்னும் பழந்தமிழ் நூலில் 16-ம் செய்யுளில் காணலாம். அது வருமாறு :

"பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
வாடெழில் அழிவஞ்சாது அகன்றவர் திறத்தினி
நாடுங்கால் நினைப்பது ஒன்றுடையேன்மன் அதுவுந் [தான்
தொன்னலம் தொலைபீங்கியாம் துயருழப்பத் துறந் [துள்ளார்
துன்னிநம் காதலர் துறந்தேகும் ஆறிடை
ஒன்பிசை உருப்பிறக் கனைதுளி சிதறென
இன்னிசை எழிலியை இரப்பவும் இயைவதோ!
புனையிழாய்! ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆற்றிடைச்
சினைவாடச் சிறக்கும் நின் சினம்தணிந்து ஈகென
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ!
ஒளியிழாய்! ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளிஒரீஇக் காதலர் அகன்றேகும் ஆறிடை
முளிமுதல் மூழ்கிய வெம்மை தீர்ந்து உறுகென
வளிதரும் செல்வனை வாழ்த்தலும் இயைவதோ!

எனவாங்கு

செய்பொருட் சிறப்பெண்ணிச்செல்வர் மாட்டினையன
தெய்வத் திறன்நோக்கித் தெருமரல் தேமொழி
வறனோடின் வையத்து வான்தரும் கற்பினாள்
நிறனோடிப் பசப்பூர்தல் உண்டென
அறனோடி விலங்கின்று அவராள் வினைத்திறத்தே

இதன் பொருள்:

துயில் இல்லாமல் பசந்த கண்கள் வருத்தத்துடன் கண்ணீர் சிந்த, நிறம்வாடி அழகு கெடுவதால் வணங்கிய முன்கையிலிருந்த வளைகள் கழல; வாட்டத்தால் அழகு அழியுமென்று அஞ்சாமல் பிரிந்து போனவர் திறத்தை ஆராயும்போது ஒன்று செய்ய நினைக்கின்றேன். அது, நம் கற்பொழுக்கத்திற்கு மாறுபட்டதாய்க் காணப்படுகிறது.

நாம் இயற்கை நலம் கெட்டு இங்கே இருந்து வருத்தத்திலே அழுந்தும்படி நம்மைக் கைவிட்ட நினைவில்லாத நம் காதலர், பொருள் மேல் காதல்கொண்டு நம்மை மறந்து செல்லும் அரிதான வழியில் கல்லின் மேல் உண்டான வெப்பம் நீங்கும்படி நிறைய மழையை சிதறுவாயாக என்று வணங்கி மேகத்திற்குரிய கடவுளை யாசிப்பது நம் கற்பொழுக்கத்திற்கு ஏற்ற செயலாகுமோ? ஆகாதே!

புனைந்த பூணுடையாய்! நாம் இங்கே தனிமையில் புலம்பிக் கொண்டிருக்க பொருள் வேட்கையால் பகைவர் நாடென்றும் கருதாமல் நம் காதலர் போக நினைத்த அரிய வழியில் மரக்கிளைகள் வாடும்படி காய்கின்ற நிறைந்த கதிரையுடைய சூரியனை உனது சினம்தணிந்து அருள்வாயாக என்று வேண்டுவது நம் கற்புக்கு இயைந்ததாகுமோ? ஆகாதே!

ஒளிப்பூணுடையாய்! இங்கே நாம் துயர்கூர்ந்திருக்க நம்மீது அருள் நீங்கிப் பொருள் மேல் ஆசை கொண்டு நம்காதலர் நம்மைப் பிரிந்து போகும் அரிய வழியில் உலர்ந்த சிறு தூறுகளிலே தங்கி நின்ற வெப்பம் ஆற அவர் மேல் வீசுவாயாக என்று காற்றைத்தருகின்ற கடவுளை வாழ்த்துவது நம் கற்பிற்கு இயைந்த செயலாகுமோ? ஆகாதே!

எனவாங்கு—என்று சொல்லி

தேமொழி! செல்வத்தால் உண்டாகும் சிறப்பை நினைத்துப் போகிறேன் என்றதற்காக இத்தகைய தெய்வத்திறனை நினைத்து மனம் சுழல விடாதே! வற்கடகாலத்தால் வையம் கெட்டால் அவ்வையத்திடத்தே மழையைப் பெய்விக்கும் கற்பினையுடையாள், நிறம் கெட்டு பசந்து படுவாள் என்று அறம் அவருடைய பிரிந்து செல்லும் முயற்சியை மாற்றிவிட்டது என்பதாம்.

இதே கருத்தை வலியுறுத்தும் தன்மையில் சிலப்பதிகார பாட்டுக்களும் இருக்கின்றன. அவற்றுள் வெண்பா வருமாறு:-

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வ [மாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து'

இதன் பொருள் :

தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழும் கற்புடையாளை தெய்வமேதொழும் என்பது உறுதியாம். மண்ணுலகில் கற்புடை மங்கையர்க்கு அழகு செய்வாளாகிய கண்ணகி விண்ணக மங்கையர்க்கு விருந்தாயினாள் என்பதாம்.

இதுபோன்ற கற்பு நெறி பற்றிய கருத்துக்கள், பழந்தமிழ் நூல்கள் பலவற்றிலும் பரவிக் கிடக்கக் காண்கிறோம்.

வடவாரியர் இலக்கியங்களில் காணப்படும் கற்பொழுக்கம் விநோதமாகவும் அருவருக்கத்தக்கதாகவும் இருக்கும். புராண இதிகாசங்களில் வரும் பாத்திரங்களின் நடைமுறையே இதற்குப் போதிய சான்றாகும்.

பாண்டுராசனுக்கு குந்திதேவி, மத்திராதேவி ஆகிய இருவரும் மனைவிமார் ஆவர். அவர்களில் மூத்தவளான குந்திதேவி கணவனுடைய சம்மதத்துடன் எமன், வாய்வு, இந்திரன் என்கிற தேவர்களுடன் விபசாரம் செய்து முறையே தருமன், பீமன், அருச்சுனன் என்கிற மூன்று பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள். பாண்டுராசனை கல்யாணம் செய்து கொள்ளுமுன்பே சூரியனுடன் விபசாரம் செய்து கர்ணன்என்பவனைப் பெற்று ஆற்றில் எறிந்திருக்கிறாள்.

இப்படிப்பட்ட குந்தியின் ஆலோசனைப்படி மத்திராதேவி என்பவளும் அசுவனி தேவர்கள் என்கிற இருவருடன் விபசாரம் செய்து முறையே நகுலன், சகாதேவன் என்கிற இரண்டு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள்

இந்த ஐந்து பிள்ளைகளும் பஞ்சபாண்டவர் என்கிற பெயருடன் துரோபதை என்கிற ஒரு பெண்ணைக் கலியாணம் செய்தார்கள் — அனுபவித்தார்கள் — ஆளுக்கொரு பிள்ளையாக ஐந்து பிள்ளைகளையும் பெற்றார்கள் என்று பாரதத்தில் சொல்லப்படுகிறது

இப்படி ஐந்து கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட துரோபதை ஐந்து கணவனும் போதாமல் மேலும் ஒருவனை விரும்பிக் கொண்டிருப்பதாக பாரதம் ஆரண்ய பர்வம் பழம் பொருந்து சருக்கத்தில் சொல்லப்படுகிறது. வருமாறு:

ஐம்புலன் களும்போல் ஐவரும் பதிகள்
ஆகவும் இன்னும்வே றொருவன்
எம்பெரும் கொழுநன் ஆவதற் குருகும்
இறைவனே எனதுபேர் இதயம்
அம்புவி தனிற்பெண் பிறந்தவர் எவர்க்கும்
ஆடவர் இலாமையின் அல்லால்
நம்புதற் குளதோ! என்றனள் வதிட்டன்
நல்லற மனைவியே அனையாள்,

இப்படி துரோபதையே கூறியதாக வில்லிபாரதம் கூறுகிறது. இதை கூறும் போது ஐந்து கணவர்களும் பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், இதைக் கேட்ட பிறகு அவர்கள் துரோபதையிடம் அருவருப்புக்கொண்டதாகவோ அலட்சியப் படுத்தியதாகவோ ஒருவரி கூட பாரதத்திற் காணப்படவில்லை. துரோபதையின் 'திறமை' என்று கருதிக் கொண்டார்கள் போலும்! குந்தி மைந்தர்கள் அல்லவா!

இதுதவிர இதே துரோபதை துரியோதனன் அவைக்களத்தில் துகிலுரியப்படும்போதும், விராடன் அரண்மனையில் அஞ்ஞாத வாசம் செய்கையில் கீசகன் என்பவனால் பலாத்காரம் செய்யப்படும்போதும் கிருஷ்ணன் முதலான கடவுளரை காப்பாற்றும்படி வேண்டியிருக்கிறாள்.

இதுதான் வடவர்களின் பெண்மை—கற்பொழுக்கம் பற்றியனவாகும். இலக்கியங்களில் மாத்திரம்தான் இந்த வழக்கம் என்று கூறுவதற்கில்லை.

வடவருக்கிடையில் 'பையா' என்னும் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் இன்னும் ஐந்து கணவனைத் திருமணம் செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறதாம்!

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த வட இந்திய சினிமா நடிகை ஒருத்தியிடம் 'ஒரு கணவன் மட்டும் வந்திருக்கிறாரே! இன்னும் நான்கு கணவரையும் எங்கே? என்று அங்குள்ளோர் கேட்ட செய்தி உலகறிந்த ஒன்று.

பாகவத புராணத்தில் கிருஷ்ணனுடைய களவு, வஞ்சனை, விபசாரம், கொலை முதலிய பாதகச் செயல்களையே தெய்வீகத் திருவிளையாடல்களாக வர்ணித்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான அந்நியரின் மனைவிமாருடன் கிருஷ்ணன் நடத்திய காம கேளிக்கைகள் பற்றி எழுதுவதற்கே நமக்குக் கை

கூசுகிறது. அத்தனையும் ஆபாசக் களஞ்சியம்! அக்கிரமச் சமுத்திரம்! ஆயினும் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுவோம் ஆராய்வுக்காக!

சீலையைக் களைந்துவிட்டு நிர்வாணமாக குளத்தில் குளித்தனராம் பெண்கள்! அப்போது கண்ணன் வந்தான்! அந்த சீலைகளையெல்லாம் சுருட்டி எடுத்துக் கொண்டு அண்டையில் இருந்த மரத்தில் ஏறிக்கொண்டான்! "பெண்களெல்லாம் கரையில் வந்து நின்று கைகூப்பி வணங்கினால் சீலைகளைத் தருவேன்" என்றான்! அவ்வாறே வணங்கிச் சீலைகளைப் பெற்றனர் பெண்கள்!

திராவிடப் பெண்கள் நிர்வாணமாக குளத்தில் இறங்கிக் குளிப்பார்களா? அப்படியே குளித்தாலும் கூட்டமாக மந்தைமாடு போல் கரையில் நின்று வணங்கி சீலையை வாங்கச் சம்மதிப்பார்களா? இப்படி ஒரு ஆபாசத்தை எங்காவது தமிழில் காண முடியுமா?

ஆரிய சமூகத்தில் இத்தகைய ஒழுக்கக் கேடுகள் பரம்பரைக் குலநெறியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்து பாரதக் கதையின் ஆரம்பகாலத்திற்குச் சற்று முன்னால் சுவேதகேது என்பவரால் சிறிது சீர்திருத்தம் செய்யப்பட்டதென்று வியாசனுடைய மகா பாரதம் ஆதிபர்வம் 128-ம் அத்தியாயத்தில் காணப்படும் கீழ்க்கண்ட செய்திகளால் அறியலாம்:—

பாண்டுராசன் போகம் செய்யவும் குழந்தை பெறவும் இயலாதவனாகியபடியால் தனது முதல் மனைவி குந்திதேவியிடம் விபசாரம் செய்து குழந்தைகளைப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறான். அவள் விபசாரம் செய்வதற்கு சற்று தயங்குகிறாள். அப்போது பாண்டு அவளுக்குத் தேறுதல் கூறுகிறான்.

"பெண்ணே! பண்டைக்கால மூதல் பெண்கள் திருமண வரன் முறையில் இருந்ததில்லை! தமது விருப்பம்போல் கண்டவரோடு புணர்ச்சி செய்யும் தன்னரசிகளாகவே இருந்தனர்! இளமை தொட்டே தம்மால் வரிக்கப்பட்டவர் இருந்தாலும்கூட அவர்களைப் பொறுத்தமட்டில் அந்தச் செயல்கள் ஒழுக்கக் கேடாகக் கருதப்படவில்லை! காரணம்; அந்த வழக்கம் இயல்பாக முன்பிருந்தே நடைமுறையில் இருந்ததுதான்! விருப்பு-வெறுப்புகள் இல்லாத விலங்கினங்கள் இப்போதும் அந்த ஒழுக்கத்திலேயே இருந்துவருகின்றன. இயற்கை வாய்ந்த இந்த வழக்கம் தூயவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றும்! அன்றியும் உத்தரகுரு நாட்டில் இப்போதும் இந்த வழக்கம் மதிக்கப்படுகிறது! தற்போதுள்ள திருமண ஒழுக்கமெல்லாம் மிக சமீபகாலத்தில் ஏற்பட்டதாகும்! இந்த ஒழுக்கத்தை—யார்? எதற்காக உண்டாக்கினார்கள்? என்றகாரணத்தைச்சொல்லுகிறேன் கேள்.

உத்தாலகர் என்றொரு முனிவர் இருந்தார். அவரைப் பற்றி நீயும் கேள்விப்பட்டிருப்பாய்! அவருக்கு அறிவும் திருவும் மிக்க சுவேதகேது என்பவர் மைந்தராகப் பிறந்தார். அந்தப் பெருந்தவ மைந்தரால்தான் அறநெறி வழுவாத இக்காலத்துத் திருமண முறைகள் வெகுளி நிலையில் ஏற்படுத்தப்பட்டன.

இதனை, அவர் ஏன் செய்தார்? என்றால் அதையும் சொல்கிறேன் கேள்.

சுவேதகேதுவும் அவருடைய தந்தையாரும் ஓரிடத்தில் சேர்ந்திருந்தனர், அப்போது அங்கே ஒரு பிராமணன் வந்தான். சுவேதகேதுவின் அழகையும் சிறப்பையும் கண்டு வியந்தான். அத்தகைய மைந்தனை உத்தாலகர் பெற்ற இடத்திலிருந்து, தானும் ஒரு நன்மைந்தனைப் பெறவேண்டும் என்று கருதினான். அந்த எண்ணத்தை உத்தாலகரிடம் தெரிவித்ததுடன் அவர் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு 'வா போகலாம்!' என்றான்.

அதைக்கண்ட சுவேதகேது அடங்காச் சினமும் நாணமும் கொண்டார். தன் முன்னால் வலிந்திழுக்கப்பட்ட தன் தாயைப் பிடித்துக் கொண்டு, அந்தப் பிராமணனை மிகவும் இழிவாக நிந்தித்தார்.

அதுகேட்ட அருந்தவத்தினராகிய உத்தாலகர் 'குழந்தாய்! வெகுளாதே! இந்த வழக்கம் பழமையானது. உலகத்தில் எந்த இனத்திலும் பெண்கள் திருமண வரையறையுடன் இல்லை. விலங்குகளைப் போலவே ஆண்களைச் சேர்ந்து மக்களைப் பெருகின்றனர். அதை யாரும் தவறாகக் கருதுவதில்லை!' என்றார்.

சுவேதகேது, உத்தாலகர் சொன்னதை ஒப்புக் கொள்ளவில்லை. இச்செயலை மிகப் பெரும் இழிவாகக் கருதினார். அதன் பிறகு தற்காலம் நடைமுறையில் இருக்கும் எட்டுவித திருமண நெறிகளை வகுத்து நிலைப்படுத்தினார்.

உத்தர குரு நாட்டில் இந்தப் புதிய ஒழுக்கம் விருப்பு வெறுப்பின்றிக் கொண்டாடப்படுகிறது. ஆனால், அங்குள்ள பெரியோர்கள் பழைய வழக்கத்தை இகழ்வதில்லை. மற்றைய நாடுகளில் (தமிழகத்தில்) பிள்ளைப் பேற்றுக்காகக் கணவனே சம்மதித்தாலும் பெண்கள் விபசாரம் செய்யக் கூடாது. இவ்வாறு சுவேதகேதுவால் சமீப காலத்தில் இந்த ஒழுக்கம் ஏற்பட்டது என்று அறிவாயாக.

என்று, இந்தக் கதையைக் கூறி விபசாரம் குற்றமான செயல் அல்ல—அது நம் குல ஒழுக்கம் என்று குந்தியைத்தேற்றி விபசாரம் செய்ய தூண்டுகிறான் பாண்டு!

ஆரிய இலக்கியங்களின் அநாகரீகங்களை வெளிப்படுத்த இக்கதை ஒன்றே போதுமானதாகும்.

இனி, ஆரியர்களுக்காக சுவேதகேது வகுத்த திருமண முறைகள் எட்டையும் சிறிது ஆராய்வோம்.

(1) பிரமமணம் (2) தெய்வமணம் (3) ஆரிடமணம் (4) பிரசாபத்தியமணம் (5) காந்தருவமணம் (6) ஆசுரமணம் (7) இராக்ஷதமணம் (8) பைசாசமணம் ஆக எட்டுவிதமாம்.

பிரமமணம்

பெண்ணைப் பெற்ற தகப்பன் மணமகனைத் தேடிக்கொண்டு வந்து பெண் வீட்டார் செலவில் திருமணம் செய்து கொடுப்பதை பிரமமணம் என்று சொல்லப்படுகிறது.

தெய்வ மணம்

யாகம் செய்ய வந்த பார்ப்பனன் ஒருவனுக்கு பெற்ற பெண்ணைத் தானம் செய்து கொடுப்பது தெய்வ மணம் என்று சொல்லப்படுகிறது.

ஆரிட மணம்

யாகம் செய்வதற்காகப் பசுவைக் கொடுத்து பசுவுக்குப் பதில் பெண்ணைப் பண்டமாற்றாகப் பெறுவதை ஆரிடமணம் என்று சொல்லப்படுகிறது.

பிரசாபத்திய மணம்

மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரிடம் பெண்கேட்டுப் பொருந்திய பிறகு சீலையும் ஆபரணங்களும் கொடுத்து பெண்ணை அழைத்துப்போய்த் திருமணம் செய்வதை பிரசாபத்திய மணம் என்று சொல்லப்படுகிறது.

காந்தருவ மணம்

தலைவனும் தலைவியும் நேர்ந்த இடத்தில் ஆசைமேலிட்டுக் கூடுவதைக் காந்தருவ மணம் என்று சொல்லப்படுகிறது.

ஆசுர மணம்

பெண்ணைப் பெற்றவர்களுக்கும் தாயாதிகளுக்கும் தேவையான பணத்தைக் கொடுத்து பெண்ணை விலைக்கு வாங்கித் திருமணம் செய்வதை ஆசுர மணம் என்று சொல்லப்படுகிறது.

இராக்ஷத மணம்

பெண்ணைப் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டுபோய் வைத்துக் கொள்வதை இராக்ஷத மணம் என்று சொல்லப்படுகிறது (சுப்பிரமணியர் வள்ளியைத் திருமணம் செய்தது இந்த முறைதான்.)

பைசாச மணம்

குடிபோதை, உறக்கம், பைத்தியம் முதலிய காரணங்களால் அறிவிழந்த பெண்ணை கற்பழித்தலுக்குப் பெயர் பைசாச மணம் என்று சொல்லப்படுகிறது.

தமிழ் இலக்கியங்களில்திருமணங்களைப் பற்றி கற்பியல், களவியல், என்று வகையே கூறப்பட்டிருக்கின்றன. இதுபற்றி தொல்காப்பியத்தில் கூறியிருப்பது வருமாறு:—

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவோன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே',

இதன் பொருள்

மெய்ப்புணர்ச்சிக்கு உரியவனாக—மனைவியாகக் கொள்ளத்தக்கவனுக்கு கொடுக்கத்தக்கவன் பெண்ணைக் கொடுப்பது கற்பியல் என்று சொல்லப்படும்,

"களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டல்
திங்கள் இரண்டின் அகமென மொழிப"

"களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்
உவரிகழ் அன்பின் உயர்ச்சிமேன"

இதன் பொருள்

ஒத்த பருவத்தினராகிய தலைவனும், தலைவியும், எதிர்ப்பட்ட இடத்தில் ஒருவரை யொருவர் காதலித்து, உள்ளப் புணர்ச்சியளவில் பிரிந்து இரண்டுமாதகால அளவில் கற்பியல் முறைப்படி திருமணம் செய்துகொண்டு இன்புறுவர் என்பதாம்.

இதனை ஆராயும்போது, களவியல் என்பது, ஒத்த பருவத்தினராகிய தலைவனும், தலைவியும், ஒருவரையொருவர்கணவன்மனைவியாக நிச்சயித்துக் கொள்வதையேகுறிப்பிடும் என்று தெளிவாகும். (தொடரும்)

மேதினமே உன்வரவால்...?

சா. ராமானுசம், இரட்டணை

ஆதிமுதல் உலகினிலே
ஆதரிப்பார் யாருமற்று
வீதியிலே நடைபோடும்
வேதனையின் முழுஉருவம்
மோதுகின்ற வாழ்வுடனே
முரண்பட்ட தொழிலாளர்
மேதினியில் வாழ்வுற்றார்
மேதினமே உன்வரவால்

மசியாத முதலாளி
மாசுற்ற மனதினையே
கசியும் ரத்தமுடன்
கண்ணீரால் தான்நனைத்தும்
பசியால் துடித்தார்கள்
பலகாலம் என்றாலும்
புசியாத நிலைதனையே
போக்கிவிட்டாய் உன்வரவால்

காயாத, நீரெனினும்
கண்ணீரோ வெம்மையுடன்
ஓயாது; உழைத்தார்கள்
ஓர்நாளும் ஓய்வின்றி
மாயாத வேலையினால்
மனமொடிந்த தொழிலாளர்
நாயாக உழைத்தவர்கள்
நலமுற்றார் உன்வரால்

மேதினமே, மேதினமே
மேதினியில் உன்பெருமை
காதினிலே, கரையற்ற
காளுய் பாய்கிறது
நாதியற்ற தொழிலாளர்
நல்வாழ்வு பெற்றதனால்
ஓதுகின்றார் உன்புகழை
ஓயாது! ஓயாது!!

குன்றக்குடி மட அதிபதியே குதிப்பது இருக்கட்டும்...?

குன்றக்குடி மட அதிபதி சென்ற வாரம் கோவையில் நடைபெற்ற அருள்நெறி திருக்கூட்ட மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில், வரும் பொதுத்தேர்தலில் நாஸ்திகர்கள் எத்தொகுதியில் நின்றாலும் அவர்களை எதிர்த்து அருள் நெறிவாதிகள் என்போர் போட்டியிட தேர்தலில் குதிக்க வேண்டுமென்று 'கர்ஜனை' புரிந்தாராம்!

இந்த மடத்துத் தம்பிரான் சாமி, தேர்தல் போரில் குதிப்பது ஒருபுறமிருக்கட்டும், ஏனெனில் தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்பது ஆட்சிபீடத்தி லிருப்பவர்களுக்கே இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இந்நிலையில் தேர்தலில் குதித்து அதன் மூலம் நாத்திகத்தை முறியடிப்போம் வாரீர் என்று கூப்பாடு போடுவது அர்த்தமற்ற செயலாகும்.

எனவே குன்றக்குடி மட அதிபதி ஏற்கனவே அறிவித்த போராட்டத்தைக் குறித்து தமது திறமையையும் அருள் நெறிக் கூட்டத்தின் ஆற்றலையும் பயன்படுத்துவதுதான் அறிவுடைமையாகும். அதுமட்டுமல்லாமல் அப்போராட்டத்தின் வெற்றியை முதலாக வைத்து அவர் நாத்திகர்களையும் தீர்த்துக் கட்டிவிடலாம்!

"தமிழ் நாட்டு ஆலயங்களில் இனி தமிழிலேயே மந்திரம் ஜெபிக்குமாறு யாம் முற்படுவோம் அப்போராட்டத்தில் வெற்றிபெறுவோம். அதன் பின்னர் ஈ. வே. ரா. பெரியாரையும் அண்ணாதுரையையும் கூட ஆலய வழி பாட்டுக்கு வரச் செய்வோம் இதற்கு அருள் நெறி துணைபுரியுமாக......"

என்று முழக்கமிட்டு பல மாதங்கள் ஆகின்றன. தமிழ் நாட்டு ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்பட வேண்டு மென்று அருள் நெறி வழி நிற்கும் யான் கூறுவதைக்கூட சிலர் இதுமொழி வெறியர்களின் சேட்டை என கூப்பாடு போடுகின்றனரே— இதனை யாம் சகியோம் என்று குன்றக்குடி மடஅதிபதி அண்மையில் கூட ஒரு திருக்கூட்டத்தில் அடியார்கள் முன்னிலையில் அங்கலாய்த்துக் கொண்டார்.

ஆனால் தமிழ் நாட்டுப் பூசாரிகளோ (அர்ச்சகர்கள்) ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்ய முடியாது. அப்படி செய்தால் ஆண்டவன் தன்மை கெட்டுவிடும் ஆகமங்கள் சீர்குலைந்துவிடும்; அதற்கு மேலாக இந்துக்களின் உரிமையே பறிபோய் விடும் என்று 8-5-55-ம் நாள் சென்னையில் கூடிய தென்னாட்டுப் பூசாரிகள் (அர்சகர்கள்) சங்க கமிட்டியில் முடிவு செய்துள்ளனர்!

எனவே குன்றக்குடி மட அதிபதி தமது போர்க் கோலத்தோடு குதித்துத் தீர்க்கவேண்டிய முதல் பிரச்னை பூசாரிகளின் முடிவைப் பற்றியே யாகும். இப்படி செய்வதுதான் நாணயம், நேர்மை, ஒழுங்கு முறை ஏன் அறிவுடைமை கூட என்று ஆத்திகர்கள் என்பவர்களே மனதார ஒப்புக்கொள்வர்.

ஆகவே எப்போதோ நடைபெறபோகும் பொதுத்தேர்தலில் குதித்து நாத்திகர்களை முறியடிக்கும் அசகாய சூரத்தனத்தை குன்றக்குடி மட அதிபதி தனியாக (ஸ்டாக்) சேமித்து வைத்து விட்டு, சற்று வீரத்தோடு சொன்ன சொல்லைக் காப்பாற்றும் நேர்மைப் பண்புடன் அவரின் முதல் போராட்டத்தில் குதித்து கடமையாற்ற முன் வருவாரா?

—நக்கீரன்

நூல் நிலையத்திலும் களவு!

குடியேற்றம் பிச்சனூர் தாழ்த்தப்பட்டோர் பகுதியிலுள்ள அம்பேத்கார் நூல் நிலையத்தில் 28—4—55 அன்றிரவு பீரோவை உடைத்து சுமார் 209 புத்தகங்கள், பழைய பேப்பர்கள் ஆகியவைகளை களவாடி சென்று விட்டுள்ளனர். அதன் மதிப்பு சுமார் 90. ரூபாய் இருக்கும். நூல்நிலையத்திலும் களவாடும் பிற்போக்குக் கும்பல் காங்கிரஸ் ஆட்சியில் மலிந்து விட்டனவே என்று பொதுமக்கள் கண்டித்துப் பேசுகின்றனர். இத்தகவலை போலீசில் புகார் செய்யப்பட்டுள்ளது. என நூல் நிலைய செயலாளர் எழுதுகிறார்.

சேலம் மாவட்ட தி. மு. கழகம்

8—5—55 பிற்பகல் 2-மணிக்கு, சேலம் கூட்டுறவு ஓய்வு விடுதியில் நடைபெற்றது. செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கி சேலம் மாவட்ட தி. மு. கழகக் கூட்டத்தைத் துவக்கினார், அதுபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. சேலம் அம்மாபேட்டை தோழர் ஈ.எ.ஆர். இருளப்பன் அவர்கள் சென்ற 3—5—55 இரவு திடீரென விபத்துக்கு ஆளாகி அகால மரணமடைந்தமைக்கு இக்கூட்டம் வருந்தி தனது அனுதாபத்தை அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கிறது.

2. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தி. மு. க. பொதுச்செயலாளராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு இம்மாவட்டக் கழகம் பெரிதும் மகிழ்வதோடு. தனது பாராட்டுதலை அன்னாருக்குத் தெரிவித்துக்கொள்கிறது.

3. நமது மாவட்டச் செயலாளர் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்களை மாநில மாநாட்டின் திறப்பாளராக தேர்தெடுத்து உள்ளமைக்கு மகிழ்வதோடு, தனது நன்றியினை பொதுக் குழுவிற்கு தெரிவித்துக்கொள்கிறது.

4. புதிய பொதுச்செயலாளரை அழைத்து, சேலம் மாவட்ட தி. மு. க. சார்பில் தக்க முறையில் பாராட்டுக் கூட்டம் நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

5. மாநில மாநாட்டின் நமது மாவட்டத்தின் பங்கான ரூபாய் 2000 நிதியை வசூலிப்பதற்கான பொறுப்புகளை ஏற்று, இயன்ற எல்லா வழிகளிலும் வசூலிக்க, நமது செயலாளர் துணைச்செயலாளர் பொருளாளர், ஆகிய மூவரோடு மற்றும் இருவரைச் சேர்த்துக்கொண்டு பணியாற்ற வேண்டுமென்று இக்கூட்டம் முடிவு செய்கின்றது.

6. நமது மாவட்ட மாநாட்டின் மீதிப்பணத்தில் நகரக் கிளைக்கு பங்குக் கொடுப்பது பற்றி, தலைமை நிலையத்தின் கருத்தின்படி செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

தாரை வட்டக் குழு

7—5—55 பிற்பகல் 2-மணிக்கு மூலனூர் ரேடியோ மைதானத்தில். கோவை மாவட்ட துணைச்செயலாளர் தோழர் வி. சண்முகநாதன். தலைமையிலும் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் முன்னிலையிலும் தாராபுரம் தி. மு. கழக வட்டக்குழு அமைக்கப்பட்டது, அதுபோது காதக்கோட்டை ந. சின்னமுத்துசாமி செயலாளராகவும். மீனாட்சிபுரம் எஸ். வி. சக்கரை துணைச்செயலாளராகவும். கன்னிவாடி பெரியவர் கே. எஸ். சேரங்கராயர் பொருளாளராகவும். குமாரசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் மற்றும் 7 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

பட்டுக்கோட்டை தாலுகா (வட்டம்) தி. மு. க.

8—5—55 ஞாயிற்றுக்கிழமை பட்டுக்கோட்டை தாலுகா (வட்டம்) தேர்தல் கூட்டம் பட்டுக்கோட்டை கே. ஓ. கே கட்டிடத்தில் தோழர் கே. அடைக்கலம் அவர்கள் தலைமையில் கூடி அடியில் கண்ட நிர்வாகிகளை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர். எம் கிருஷ்ணமூர்த்தி (குருவிக்கரம்) துணைச்செயலாளர், எம். எஸ். சிவகுருநாதன் (பனங்குளம்) பொருளாளர், டி. ராமச்சந்திரன் (ஆலடிக்குமுளை)

மாவட்ட பிரதிநிதிகள் கே. வி. எ. ராமமூர்த்தி (பட்டுக்கோட்டை) பி. வடிவேல் (பேராவூரணி) எ. எம். செயச்சந்திரன் (சித்துக்காடு)

அமைப்பாளர்கள், கே. மாணிக்கம் (பட்டுக்கோட்டை) கே. மாணிக்கம் (பேராவூரணி) வி. ராமசாமி (ஆலடிக்குமுளை) சாமி கோவிந்தராசன் (பட்டுக்கோட்டை) எஸ். காசிநாதன் (மதுக்கூர்) கூட்டத்தில் பட்டுக்கோட்டை தாலுகாவிலுள்ள 22 தி. மு. க. கிளைக் கழகத்தின் செயலாளர்களும், பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தென்பகுதி இரயில்வே மென் யூனியன் (பொன்மலை)

திருவண்ணாமலை கிளை

இக்கிளையின் பொதுக் குழுக் கூட்டம் கடந்த 4—5—55 புதன் மாலை 3மணி அளவில் களம்பூர் போர்டு உயர்நிலைப் பள்ளியில் திரு. அய்சையா (தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய சங்கத் தலைவர் தோழர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் யூனியன் கொள்கையும் பணியும் என்பது குறித்து பேசினார். பின்னர் செயலாளர் தோழர் குப்புசாமி ஆண்டறிக்கை வாசித்தார். கணக்கு பரிசீலனை செய்யப் பட்டபின் கீழ்கண்ட நிர்வாகிகள் நடைமுறை ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தலைவர் : தட்சிணாமூர்த்தி (S. M. தண்டரை)

துணைத் தலைவர் : சபாபதி (S. M. ஆரணிரோட்)

செயலாளர் : சி. குப்புசாமி (G. L. C. திருவண்ணாமலை)

துணைச் செயலாளர்கள் : எ. மாரிமுத்து (Gate keeper திருவண்ணாமலை) தோழர். இரக்மான் (P. Man ஆரணி)

மத்தியசங்கஉறுப்பினர் : இராமலிங்கம் (G. L. C. திருக்கோவிலூர்)

பொருளாளர் : கிருட்டிணசாமி (A. B. C. திருவண்ணாமலை)

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் : கே. இராமசாமி, மாணிக்கம், சஞ்சீவி, இராமமூர்த்தி, அமிர்தலிங்கம், கோபால கிருஷ்ணன்,

---

சிறைச்சாலை குறிப்புகள்—தொடர்ச்சி

வில்லை. எனக்கு குழந்தை இல்லை. பெற்றோர் இல்லை. உறவினர் இல்லை. துயரத்தில் பங்குகொள்ளும் துணை இல்லை.

அந்தப் பறவை மீண்டும் பாட ஆரம்பித்தது அதற்குள் எல்லாம் மறைந்துவிட்டன. சே! வெறும் கனவு! நிறைவேறாத ஆசைகளின் உருவெளிக்கூத்து! பிரமைச் சுழல்!

என் வாழ்வில் எங்கிருந்தோ ஒரு மாறுதல் முளைத்தது. எத்தனையோ நாட்களும் மாதங்களும் சுருங்களான பின்னர் இது நிகழ்ந்தது.

காவலாளிகள் இரக்கம் காட்டினார்கள் என்னைப் பிரிக்கும்போது அவர்கள் கண்களில் கனிவின் நிழல் லேசாக தெரிந்தது.

அது ஏன்! அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை! இப்போதும் என்கைகளை விலங்குகள் பிணைத்திருக்கின்றன. ஆனால் சிறைக்குள் நடமாடும் உரிமை தரப்பட்டது. நான் நடக்கும்போது என்னை ஒவ்வொருவரும் உற்று கவனிப்பார்கள், ஏனெனில் நான் தப்பிவிடக் கூடாதல்லவா!

படிகள் வழியாக சிறையின் மேல்தளத்துக்கு போகவேண்டுமென்று எனக்கு ஆசை ஏற்பட்டது. அங்கே நின்று இயற்கையை தரிசிக்க வேண்டுமென்ற ஒரு ஆவல்—தணியாத தாபம் ஏற்பட்டது.

நான் அவைகளைப் பார்த்தேன்.

மேல்தளத்தில் நின்று மலைத்தொடர்களைப் பார்த்தேன். அவை எப்போதுமே ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. என்னைப்போல மாறிவிடவில்லை.

மலைச் சிகரத்தை மூடியிருந்த பனியைப் பார்த்தேன். நீலநிற ஏரிகளில் அலைகள் புரள்வதைப் பார்த்தேன்.

தூரத்தே மூன்று ஓங்கிய மரங்கள் தெரிந்தன மலைக்காற்று மரக் கிளைகளை அசைத்துச் சென்றது அப்போது உதிர்ந்த மலர்களை, கீழே ஓடிய ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றது.

நான் மீண்டும் கீழே இறங்கியபோது எனது சிறை அறையின் இருள், கனமான பாரமாக என் மீது விழுந்தது. புதிதாக தோண்டப்பட்ட புதைகுழிபோல காட்சியளித்தது. அங்கே இருந்த தனிமை என்னை எடுத்து விழுங்கியது.

தனிமை எனக்கிடப்பட்ட சாபமா!

அழகான பகல் பொழுதில்—வானம் முழுதும் நிர்மலமாக இருக்கும்போது—வெப்பமோ குளிர்ச்சியோ இல்லாத சாந்தமயமான சூழ்நிலையில்—பூமியில் மகிழ்ச்சி பொங்கும்போது—வேலையின்றி அலையும் ஒரு ஒற்றை மேகத்தைப் போல நான்—!

★

கால் ஆணிக்கு மேல்பூசும் மருந்து

●

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப் போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்க முடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1க்கு விலை ரூ. 2-8-0 தபால் சார்ஜ தனி

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்

சென்னை-12.



30

கடந்த இதழின் நீட்டுக் கதை...!

...வெற்றித் துரத்திய புரு...... கொஞ்சிப் பேசத் துடித்தது. ஏக் கீத்தின் ஏகப் பிரதிநிதியான புது மலர் வனஜா அந்த நல்ல நிலையை வரவேற்ருள். கொட்டும் மழை யிலே மொட்டு விரித்து மகிழ்ந் திருந்த வாச மலரிடம் பறந்து சென்ருன் சேகர். சுட்டு விட்டது காதல் தீ...தொட்டுவிட்டார்கள் இருவருமே இன்ப எல்லையை...!

●

நீண்டு வளர்ந்த கூந்தல் சுருண்டு படர்ந்திருந்தது. விரித்த வண்ணச் சிறகு கோல மயிலுக்கு எழில் கூட்டுவது போல, ஆடிப் பறந்த வனஜாவின் கூந்தல் அந் தப் பொன்மேனிக்கு சோபை யைத்தான் தந்தது! கருமேகக் கூந்தலிலே மலர்ச் சரம் வேலி போட்டு நின்றது. அங்கே ஒய்யா ரத்தோடு தலை தூக்கிய ஒற்றை ரோஜா தான் உதிரும் நிலையிலே யிருக்கிறோமென்பதைக் கூட மறந்துதான் விட்டது...பதவியா லும், பணத்தாலும் அடிபட்டு தலை 'கவி'ழ்ந்தாடும் சில அரசி யல் கருகிய மலர்களைப்போல!

சூடான காபியை குளிர்ந்த கரத்திலே தாங்கி வந்தாள். வர வேற்புக்குக் கரம் நீட்டினான் சேகர். இரும்பும் — காந்தமும் மோதிக் கொண்டன. உணர்ச்சி அந்தக் குயிலை ஊமையாக்கி விட்டது. அதரத்தைக் கண்ணா டிக் கோப்பையிலே பதித்தான். குவித்த அதரங்களைக் காட்டி விட்டு முல்லை நகை சிந்தினாள். அந்தச் சிரிப்பிலே காலத்தின் கதை யிருந்தது. சேகருக்கு எதிரேயிருந்த மேசையிலேஇடை சாய்த்து நின்ருள் வனஜா. அந்த லாவகம் கொடியிலே படர்ந்த புதுமலரை நினைவு படுத்தியது. அந்த அங்க அசைவிலே கருகிய மலர் கூந்தல் பீடத்தை இழந்து தரையைத் தஞ்ச மடைந்தது. வானத்துத் தாரகை வையத்தை நோக்கி அறுந்து வீழ்ந்தது போலப்பட்டது சேகருக்கு. பதவி இழந்த மாஜி மலரையே விழி திருப்பாமல் பார்த்துக்கொண்டே யிருந்தான். இருண்ட அமைதிக்கு சாவுச் சமாதி எழுப்பிவிட்டு மீண்டும் குரலெடுத்துப் பேசத் துவங்கினாள் வனஜா!

..."சேகர்! இந்தக் கருகிய மலர் உன்னிடம் கதை பேசினால் நெஞ்சத்தில் முன்பெல்லாம் கூத்தாடி இப்போது செத்துக் கொண்டிருக்கும் ஆசையைத்தான் கூற முடியும். வாழ்வு வாடிய மல ராக யிருக்க வேண்டுமென்று யார்தான் சேகர் விரும்புவார்கள். பாலையிலே யிருந்தாலும் சோலைக் கனவு காணுவதுதானே மனித னின் தணியாத வேட்கையாக யிருந்து வருகிறது. ஆசை என் இதயத்தை எரித்தது. இப்போது இதய ஆசையையே சுட்டெரிக் கப் பழகிக் கொண்டேன்—பக் குவமாகிக் கொண்டேன். இந்த நிலைக்கு நான்வர எனக்குத் துணை புத்தரின் போதனைகளல்ல. கமண்டல மேந்திகளின் தெளி வுரைகளுமல்ல! நீ தந்த வேதனை தான் என் வாழ்வை வெறுக்கும் போதனைகளாக அமைந்தன. புத் தருக்குக்கூட தொல்லைகள் தானே ஆசையை வெறுக்கும் முதல் பாடத்தைச் சொல்லிக் கொடுத் தன. கன்னிமாடத்திலே வேதனை மூச்சுக் கிளப்பும் கணிகையரா வது 'இனி இன்பவாழ்வு தேவை யில்லை' என்று விளம்பர முக் காடு போட்டுக் கொண்டு நட மாடுகிருர்கள்......நானோ அவர்க ளுக்கும் கீழான நிலையில்...எது வும் பேச முடியாத அளவில்! நான் பேசவில்லையே யென்பதற் காக ஊர் என்ன ஊமையா? அது உலகதிரக் கூறுகிறது. ஊரார் ஒவ்வொருவரும் ஒரு விசித்திரக் கதாசிரியர். கற்பனை யை எப்படி யெப்படியோ மாற் றித் திருத்தி கதை கட்டுகிருர்கள் அந்தக் கற்பனையின் உருவகம் என்னை முக்காட்டு முகாமுக்கே விரட்டி விடுமோ யென்றுதான் அஞ்சுகிறேன்"

"வனஜா! சிறகிருந்தும் பறக் காத புருவை நீ பார்த்திருக்கி ருயா?"

"பார்த்ததில்லை சேகர்!"

"வாழ்வுச் சிறகு இருக்கிறது உன்னிடம், வண்ணச் சிறகு விரித்து கோலஞ்சேர் ஞாலச் சிறப்பு கண்டு நீலமேகத்துக் குள்ளே ஏன் வனஜா வட்டமிடக் கூடாது? படித்த நீ...அறிலும் அறியாத பருவத்தினருக்குப்புரிய வைக்கும் ஆசிரியையுமான நீ துக் கக்கடலின் மணற் பரப்பிலே யே ஓடி ஆடிக்கொண்டிருப்பது? காலத்தின் சவுக்கடி எல்லோருக் குந்தான் கிடைக்கிறது. எல்லோ ருமே வேதனை தாங்கிகளாகி வெறுப்புலக வாசிகளாகி விட் டால் சாவுச் சங்கநாதந்தானே இங்கே முழங்கும். நல் முத்துக் கிடைக்கும் நீலக்கடல் உனது இத யம், அலைகள் எழும்பிக் குதிக்கத் தானே செய்யும். பாலைவனத்தின் கொதிக்கும் மணல் சூட்டை சோலைவனத்தின் குளுமைத் தென்றலால் ஆற்றிக் கொள்ளலா மல்லவா?"

"சேகர் நீ புது விளக்கம் பேசு கிருய். வாழ்வுக்கு! எண்ணத் தோடும், பேச்சோடும் நின்று விடுவதால்தான் 'புது வாழ்வு' என்றென்றும் நோயாளிக் குழந் தையாகவே இருந்து வருகிறது. ஒரே சிறகோடு பண்பாடிப் பறக் கும் புருவைப் பார்த்திருக்கி ருயா?"

"பார்த்ததேயில்லை!"

"நீ பார்த்ததில்லை பாரிலே எங் கெங்கும்...கேள்வி கூடப்பட் டிருக்கமாட்டாய் அப்படி ஒரு விசித்திர நிகழ்ச்சி நடந்ததாக!... என்ருலும் கூறுகிருய், வேண்டு கோள்விடுகிருய் அன்புரை தரு கிருய் 'சிறகடித்துப்பற' என்று! என்னிடமிருப்பது ஒரே சிறகு தான்; மிகுதிப் பகுதியோ உன் னிடமிருக்கிறது. சிறகை இணைக்க மட்டும் மறுத்தாய். இப்போது 'பற நன்ருகப்பற' என்று உப தேசம் புரிகிருய் தம்பிரான்போல வாயையும் கரத்தையும் கட்டி விட்டு விருந்து சுவைக்க வருந்தி வருந்தி அழைக்கிருயே! இது தானு நீ உலகைப் புரிந்த லட்ச ணம். வாடித்துடித்தேன் அன்று. வாழ்வுச் சோலைக்கு உன்னையும் அழைத்தேன், நீயோ சுந்தரப்பண் பாடிய என்னை சுடுகாட்டுப் பேயாக 'கற்பனை' செய்து பார்த்து அலறிஞய் மணல் எடுத்து வீசிஞய்...நானிருந்தேன் காதல் கடலில்! நீ ஓடிஞய் துடி துடித்தாய்சுடுமணலில். உனக்குப் புரிந்திருக்காது சேகர் காதல் கானம் நான் பாடிய போது...... வேதனை தாகம் எனக்கெப்படி யிருந்ததென்று! அப்போது கடமை, கடமையென்று கர்மவீர னுக்குக் காட்சி தந்தாய் அந்தக் கடமையென்ன, காவி கட்டிய உலகத்துக்கா உன்னை வாழ்த்துக் கூறி வழியனுப்பக் காத்துக் கொண்டிருந்தது. இப்போது டாக்டராகி யிருக்கிருய். என்னை அன்றே உன் வாழ்வுக்குத் துணை யாக்கி யிருந்தால் டாக்டர்தொழி லுக்கு நானென்ன எமனுகவா ஆகியிருப்பேன். இல்லை காதல் உலகிலேயே சிந்து பாடிக் கொண்டு இந்த உலகையேவா மறந்திருப்போம். அன்றே, நாம் நமக்கே சொந்தமானுல் இப்படி வேதனை முடியாத தொடர்கதை யாகி யிருக்காதே! ஊர் கூருதே. புதுக்கதை சேகர். நமக்கு நாமே சோகக்குகையைத் தேடிக்கொண் டோம். முள்ளிலே கால் பதித்து விட்டோம்!"

"காலைக் குத்திய முள்ளைக் கையாலெடுப்பது சிரமமென்று கருதுகிருய். சிக்கல் சூழ்நிலையால் ஏற்படுகிறது. அதை சரிசெய்து கொள்வதுதான் அறிவுத் தெளிவு"

(அடுத்த இதழில்)

அமிர்தம்மாள்-ராமசாமி

கழிஞ்சூர் தி. மு. க. நிர்வாகக் குழு உறுப்பினர் கே. சி. ராமசாமி அவர் களுக்கும் தோழியர் அமிர்தம்மாள் அவர்கட்கும் தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமையில் 5—5—55ம் நாளன்று சீர்திருத்த திருமணம் நடை பெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கரிகாலன், இளஞ்செழியன், கருத்தோவியன் ஆகியோர் பேசினர். தோழர் கோ. இராமு நன்றி கூறினர். இதன் நினைவாக திராவிடன் வளர்ச் சிக்கு ரூபாய் ஒன்று நன்கொடை அளிக் கப்பட்டது—வரப்பெற்ருேம் நன்றி— நிர்வாகி.

"திராவிடன்" சந்தா விவரம்

●

உள்நாடு

ஆண்டு சந்தா ...	ரூ. 8	0	0
ஆறுமாதம் ...	ரூ. 4	0	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா ...	ரூ. 9	0	0
ஆறு மாதம் ..	ரூ. 4	8	0
தனிப்பிரதி ...	ரூ. 0	3	6

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண் டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய் கிறேம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறேம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127- பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

செய்திகள்

பம்பாய்

பம்பாய் தென்னிந்திய நாடார் மகாஜன சங்க பம்பாய் வட்டார முதல் மாநாடு ஏப்ரல் 30, மே 1ம் தேதிகளில் பம்பாய் தாராவி கன்னடிச்சால் திடல் "பாண்டியன் பந்தலில்" சிறப்பாக நடந்தேறியது. முதல்நாள் மாலை 5-மணி அளவில் மாகிம் புகைவண்டி நிலயத்திலிருந்து தருவிக்கப்பட்டிருந்த தலைவர்கள் நான்கு புரவிகள் பூட்டிய ஒய்யாரமான வண்டியில் மாநாட்டு பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். ஊர்வலத்திற்கு திரு டி. தாசன் தலைமை தாங்கினார். ஊர்வலத்தின் போது திருவாளர்கள் ஜே. தாமஸ் எஸ். எஸ். அந்தோனி தலைமையில் சிலம்பக் கலை வல்லுணர்பவரின் விளையாட்டுகள் இடம் பெற்றன.

முதல் நாள் நிகழ்ச்சிகள் வரவேற்புக் குழு பொதுச்செயலாளர் பி. ஆசீர் செல்லத்துரை (நாடாரின்) துவக்க உரைக்குப் பின் தொடக்கம் பெற்றன. நிகழ்ச்சிகளுக்கு வரவேற்புக்குழு தலைவர் திரு எஸ். பொன்னையா (நாடார்) தலைமைதாங்கினார். பம்பாய் நாடார் மக்களின் சார்பாக தலைவர்களுக்கு திரு கே. ஆர். தேவாரம் அவர்கள் வரவேற்பு பத்திரம் வாசித்து வழங்கினார். பின்னர் பல ஸ்தாபனங்கள்—தனி நபர்கள் ஊர்கள் ஆகியவைகளின் சார்பாக தலைவர்களுக்கு மடல்களும்—மாலைகளும் வழங்கப்பட்டன. பின்னர் தாயகத்திலிருந்து வந்திருந்த தலைவர்களான வி. வி. ராமசாமி எம். எல். சி. (துணைத்தலைவர் நாடார் மகாஜன சங்கம் மதுரை) ப. ரா. முத்துசாமி) வி. பி. ஆர் கங்காராம் துரைராஜ் (பொதுசெயலளார்கள் ந. ம. சங்கம் மதுரை) ஆகியோர் வரவேற்புக்கு நன்றிகூறினர் அடுத்து எம். ஜே. ஞானையா குழுவினரால் "நாடார் மகாஜன சங்க சேவைகள்" என்னும் தலைப்பில் உரையாடல் நடைபெற்றது தொடர்ந்து குமாரி எஸ் கஸ்தூரி—குமாரி லதா ஆகியோரின் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்னர் திரு ஜே. தாமஸ் அவர்கள் பல ஆசனங்களை நடத்திக் காண்பித்தார் இரவு 11-மணி அளவில் இடைவேளை கொடுக்கப்பட்டு மீண்டும் ப. ரா. முத்துசாமி தலைமையில் பொருளாய்வுக்குழு நடுநிசி 1-மணி வரை நடந்ததுடன் மாநாட்டு முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

இரண்டாவது நாள்

ஞாயிறு காலை 9-30மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் மி. ஆ. சி. சந்திரசேகர பாவலரின் இசை விருந்துடன் ஆரம்பமாயின. பம்பாய் சட்டசபை உறுப்பினர் என். சர்லிவாடீஸ்வரன் தேசியக் கொடி யேற்றுவித்துப் பேசினார். பின்னர் வரவேற்புக்குழு தலைவர் எஸ். பொன்னையா வரவேற்புரை யாற்றினார். அடுத்து பம்பாய் மாநில கல்வி—சட்ட அமைச்சர் தினகரராவ் என். தேசாய் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினார். அடுத்து திரு. எ. எம். தங்கையா முன்மொழிய—திரு. டி. சுப்பையா வழிமொழிய வி. வி. இராமசாமி எம். எல். சி. மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசினார். அதன்பின் ராவ்பகதூர் த. இரத்தினசாமி, ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார், சென்னை மாநில முதலமைச்சர் கே. காமராஜ ஆகியோரின் திருவுருவப் படங்களை முறையே ப. ரா. முத்துசவம், வி. பி. ஆர். கங்காராம் துரைராஜ, கே. ஜி. நடராஜ, ஆகியோர் திறந்துவைத்துப் பேசினர். பின்னர் மாநாட்டினை வாழ்த்தி பல இடங்களிலிருந்து வந்திருந்த தந்திகளையும்—வாழ்த்துச் செய்திகளையும் திரு ஞா. தியாகராஜு வாசித்தார். பிற்பகல் 1மணி அளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் இடைவேளைக்காக முடிவடைந்தன.

மாலை நிகழ்ச்சிகள்

மீண்டும் மாலை 5 மணியளவில் மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கின. அது போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

30—4—55-ல் எதிர்பாராதவிதமாக அணைஞ்சாம்பட்டி தானியேல் அவர்களின் குமாரர் பாக்யநாதன் மரணம் குறித்து வருந்தி அன்னாரின் குடும்பத்திற்கு இம்மாநாடு தன் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

[முன்மொழிந்தவர் வி. வி. ராமசாமி

பம்பாயில் குறிப்பாக தாராவியில் நாடார் பள்ளி ஒன்று நிறுவ முயற்சி எடுக்கும்படி பம்பாய் தென்னிந்திய நாடார் மகாஜன சங்கத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிந்த திரு எஸ். பொன்னையா வழிமொழிந்த திரு. டி. சுப்பையா ஆகியோர் ஆளுக்கு ரூ. 1001 (ஆயிரத்தொன்று) நன்கொடை அளிப்பதாக உறுதி எடுத்தனர். மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

பின்னர் திருமதி ஜானகி ஞானமணி அம்மாள், குமாரி லலிதா லட்சுமி ஐசக் B. Sc. திருமதி ஏ பி. எம் ஜோதிஅம்மாள், ப. ரா. முத்துசாமி கங்காதர துரைராஜ ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெற்றன. தலைவர் முடிவுரைக்குப்பின் 'விந்தியா' துணையாசிரியரான ரெ. முருகையா தலைமையில் சங்கீத பூஷணம் ஜி. புத்திசிகாமணி பாகவதரின் இசைவிழா நடைபெற்றது. இறுதியில் வரவேற்புக் குழு பொதுச் செயலாளர் பி. ஆசீர்செல்லதுரை நன்றி கூற மாநாடு இனிது முடிந்தது.

இம்மாநாட்டிற்கு சுமார் 2500 ஆண்களும் 500க்கு மேற்பட்ட பெண்களும் கலந்து கொண்டனர் மேலும் சிறப்பு அழைப்பின் பேரில் சகோத்ர சமூகப் பிரமுகர்களும்—அரசியல் கட்சிப் பிரமுகர்களும்—கலந்துகொண்டு மாநாட்டைச் சிறப்பித்தனர்.

*

அந்தேரி

1—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு அந்தேரி தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் பம்பாய் பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்கள் தலைமையில்நடைபெற்றது அது சமயம்: துணைச் செயலாளர் தோழர் ஈ. முத்தையா அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்தார்கள் பின்னர் தலைவர் முன்னுக்குப் பின் கழக வளர்ச்சி குறித்து தோழர்கள் எல். எம். பாண்டியன், பி. செண்பகப்பாண்டியன், சண்முகராசன், இரா தஞ்சைத்துரை, எஸ் கணேசன் முதலியோர்கள் பேசினார்கள் பின்னர் கழகக் கூட்டம் இரண்டு, மூன்று திங்கள் நடாத்த முடியாமல் தடைப்பட்டு கிடந்ததை முன்னிட்டு இந்தக் கூட்டம் பம்பாய் பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. தோழர் எல். எம். பாண்டியன் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அடுத்து கழகப் பொதுப் பணத்தை செயலாளர், பொருளாளர் இருவர் பெயரில் பாங்கியில் போடும்படியும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் பம்பாய் பொதுக்குழு உறுப்பினர்களாக தோழர்கள் எஸ். கணேசன், எல். எம். பாண்டியன் இருவரையும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

*

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

24-4-55 இரவு 8 மணிக்கு தோழர் எம். பன்னீரையா அவர்கள் தலைமையில் மன்ற செயற்குழுக் கூட்டம் நடந்தது.

அதுபோது தோழர் புத்தாசு அவர்களை இவ்வாண்டு பாண்டியன் ஆசிரியராக தோழர் டி. வி. துரை அவர்கள் முன்மொழிய தோழர்கள் வடவைக் குயில் மா. இரா. குறள்தாசன் ஆகியோர்கள் வழிமொழிய ஏகமனதாக தேர்த்தெடுக்கப்பட்டார். 'பாண்டியன்' திங்கள் ஏட்டின் ஆண்டு விழாவை 8—5—55-ல் நடத்துவதென்றும் தாயகத்திலிருந்து பம்பாய் வரவிருக்கும் வி. வி. இராமசாமி, மி. பா. ரா. முத்துசாமி, கங்காராம் துரைராஜ ஆகியோர்களுக்கு தேனீர் விருந்து நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மதுரை

1—5—55 மாலை 3 மணிக்கு நகர் தி. மு கழக செயற்குழுக் கூட்டம் செயலாளர் பி. கே. சேதுராமன் தலைமையில் நடந்தேறியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராக திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதை இச்செயற் குழு தனது பாராட்டுதலைத் தெரிவிக்கிறது

மாநில மாநாட்டு நிதிக்காக மதுரை மாவட்ட சார்பாக கொடுக்கவேண்டிய ரூபாய் இரண்டாயிரத்துக்காக மதுரை நகரிலுள்ள இயக்க படிப்பகமும் பொதுச்செயலாளர் அவர்கள் மதுரை வரும்போது (15—5—55) பண முடிப்பு கொடுக்க வேண்டுமென தீர்மானிக்கிறது.

15—5—55 காலை 7 மணிக்கு ரயில்வே நிலயத்தில் பொதுச்செயலாளருக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிப்பது மாலையில் தேநீர் விருந்து ஊர்வலம் பொதுக்கூட்டம் நடத்துவது.

நகர்கழகப் பொருப்பாளராக பாண்டி அவர்களை நியமித்து அன்னாருக்கு மாதம் ரூ. 45 உதவி அளிப்பது என்றும் தீர்மானிக்கிறது.

திண்டுக்கல்

1—5—55 மாலை 5-மணிக்கு வ. உ. சி திடலிலிருந்து தோழர் பி. இராசா அவர்கள் தலைமையில் தி. மு. கழகத் தோழர்கள், தொழிலாளர்களின் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய தெருக்களின் வழியாக வந்து திடலயடைந்து 7-மணிக்கு தோழர் என். முத்து அவர்கள் தலைமையில் தி. மு கழக மேதினப் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர் பி. சமதர்மம் "மேதின விழா" நடைபெறவேண்டிய அவசியம் பற்றியும் "மேதின வரலாறு" பற்றியும் விளக்கமாய் பேசினார் அடுத்து நீண்ட கைதட்டலுக்கிடையே சென்னை தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் "மேதினமும்—தி. மு. கழகமும்" என்பது பற்றியும் மாதிரி சோஷலிசமும்—நேருவும் என்பது பற்றியும் திராவிட நாடு பிரிவினை அவசியம் பற்றியும் மிக விரிவாக சொற்பொழிவாற்றினார்கள்.

*

1—5—55 காலை 10 30 மணிக்கு நகர தி. மு. க. அலுவலகத்தில் தோழர் பி. சமதர்மம் அவர்கள் தலைமையில் ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. சென்னை தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் ஊழியர்களின் கடமை குறித்தும் ஆற்றவேண்டிய பணிகளைப் பற்றியும், ஊழியர்களுக்குள் எவ்விதக் கருத்து வேறுபாடு இன்றி, தி. மு. கழக கொள்கைகள் வளர்ச்சியுற உற்சாகமுடன் உழைக்கவேண்டுமென்றும், ஜனநாயக முறைக்கு குந்தகம் விளைவிக்காத முறையில் ஊழியர்கள் நடந்து கொள்ளவேண்டுமென்றும் தொழிலாளர், விவசாயிகள் பகுதிகளுக்குச்சென்று அவர்கள் குறைகள் தீரப் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். தோழர்கள் என். முத்து, ஏ. சுப்பையா, பி. இராசா, ஆகியவர்கள் சிறிதுநேரம் பேசினார்.

திருக்கோவிலூர் (தெ. ஆ.) வட்டக் குழுஅமைப்பு

செயலாளர் அ. முத்துத் தாண்டவர் துணைச் செயலாளர் க. ஜெயராமன். பொருளாளர் தி. இ. ரா. பக்கிரிசாமி மற்றும் செயற்குழு உறுப்பினராக 11 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாகை

1—5—55 மாலை 5 மணிக்கு நாகை தி. மு. கழக இல்லத்தில் செயற்குழுக் கூட்டம் கழகத் துணைச்செயலாளர் எஸ். கல்யாணம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தம் முன்னுரையில் கழகத்தின் கடந்த கால நிகழ்ச்சி பற்றியும் நடைமுறை வேலைத் திட்டம் பற்றியும் குறிப்பிட்டார். பின்னர் பின் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தி. மு. க. வின் துவக்க நாளிலிருந்து கடந்த ஆறு ஆண்டு காலமாக கழகத்தின் பொதுச் செயலாளராகவிருந்து பணியாற்றியும் கழகத்தின் வளர்ச்சிக்கு உற்ற துணையாயிருந்தும் உதவிபுரிந்த நம் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றிபறிதலையும் பாராட்டுதலையும் தி. மு. க. வின் பொதுச் செயலாளராக நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து மகிழ்ச்சியும் கொண்டு இக்குழு வரவேற்கிறது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேறின.

பரவை

பரவை தி. மு. க சார்பில் மேதின விழா 1-5-55 தேதி காலை 8—மணிக்கு கழக கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாக வந்து கழக கட்டிடம் வந்து சேர்ந்தது பழனிவேலு நன்றிகூற ஊர்வலம் இனிது முடிந்தது முக்கிய வீதிகளில் கழக தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

பொள்ளாச்சி

23-4-55 சனி இரவு 10—30மணிக்கு தி. மு. கழக அலுவலகத்தில் பி. கே. முத்து அவர்கள் சொற்பொழிவுப் பயிற்சி வகுப்பைத் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்கள் அதுபோது தோழர்கள் வெங்கட்ராசு அலி ராமசாமி வெங்கிடாசலம் சண்முகசுந்திரம் மு. சீனிவாசன் அ. ச. பாலு கி. சேரமனி க. துரைக்கண்ணன் அழகிரிசாமி க. கண்ணன் ஆகியோர் தி. மு. கழகத்தின் லட்சியங்கள் என்பதைப் பற்றி விளக்கிப் பேசினார்கள்.

பள்ளிகொண்டா

1—5—55-ம் நாளன்று காலை 10 மணிக்கு தி. மு. கழக செயலாளர் பி. சி. விசுவநாதன் முன்னிலையில் மும்முனைப் போராட்டத்தில் கலந்து சிறைக்கொடுமைகளை அனுபவித்து வந்த சி. சீனிவாசன் தி. மு. க. கொடியையேற்றுவித்து மேதினம் கொண்டாடப்பட்டது. பிறகு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

சிறைச்சாலைக் குறிப்புகள்.

தில்லை. மறைமுதல்வன்

ஆங்கிலக் கவிஞன் பைரன் எழுதிய கவிதைத் தொகுதி ஒன்று படித்தேன். 'சில்லான் கோட்டையின் சிறைக் கைதி' என்ற கவிதை மிகவும் பிடித்திருந்தது. ஜினிவாவின் உரிமைக்காகப் போராடிய போனிவார்ட் என்பவனைப் பற்றியது அந்தக் கவிதை. அவன் இருமுறை சிறை சென்றான். இரண்டாம் முறையில் சில்லான் கோட்டையில் ஆறு ஆண்டுகள் கைதியாக இருந்தான். அவனை வைத்து பைரன் தனது நினைவுகளை கவிதையில் இழைத்திருந்தான். கவிதையில் காணப்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பை தமிழில் தர முயன்றிருக்கிறேன் படித்துப் பாருங்கள்.

*

எனது தலைமயிர் வெளுத்துவிட்டது. ஆனால் பல ஆண்டுகளாக அல்ல! அதேபோல ஒரே இரவிலும் வெளுத்துவிடவில்லை!

எனது எலும்புகள் தெம்பிழந்துவிட்டன கொடுமையான உழைப்பினால் அல்ல; பயனில்லாத உறக்கத்தால்! சோம்பேறித்தனத்தால் உடல் தளர்ந்துவிட்டது. சிறையின் இருள் என்னிடமிருந்த வலிமையை அரித்துவிட்டது. வெறும் எலும்புக்கூடு மிஞ்சி இருக்கிறது.

எங்கள் தந்தை உயிரோடு சிதையில் எரிக்கப்பட்டார். ஏனெனில் அவர் இலட்சியத்தைவிட்டு நழுவவில்லை. அதே காரணத்தால்தான் அவரது பிள்ளைகளாகிய நாங்களும் சிறையின் இருளில் புகலடைந்தோம்.

நாங்கள் ஏழு பேரிருந்தோம். ஆறு வாலிபர்கள், ஒரு வயதானவர். நால்வர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து சிதறிய ரத்தத் துளிகளில் தேசபக்தி மணம் தந்தது. மிச்சமிருந்த மூன்று பேரும் சிறை புகுந்தோம். இன்றோ...நான்மட்டும்...தன்னந்தனியாக...

*

சிறைக்குள்ளே இருள் தேங்கி இருந்தது. சூரியனின் கதிர்கள் அங்கே நுழைய முடியாது. கனமான சிறைச் சுவர்களை துளைத்துக்கொண்டு வர முடியாமல் அந்த ஒளிக் கற்றைகள் சோர்ந்து விழுந்துவிடும்.

பல ஆண்டுகளாக என் கண்கள் சூரிய உதயத்தைப் பார்க்கவில்லை. அந்த வருடங்களையெல்லாம் நான் கணக்கிடவில்லை, என் கடைசி சகோதரன் இறந்ததிலிருந்து நான் அந்த வழக்கததை விட்டுவிட்டேன்.

அவர்கள் எங்களை ஒவ்வொரு தூணிலும் சங்கிலியால் பிணைத்தார்கள். நாங்கள் மூன்று பேர்—

நாங்கள் ஒன்றாக சேர்ந்திருந்தோம், ஆம். எங்கள் இதயங்கள் இணைந்திருந்தன — ஆனால் கைகள் தழுவ முடியாமல் பிரிந்திருந்தன—மங்கிய விளக்கு வெளிச்சத்தில் எங்கள் பார்வையில் நாங்கள் புதுமையாக தோற்றமளித்தோம்.

ஒவ்வொர் பேச்சையும் கூர்ந்து கவனித்தோம். ஒருவருக்கொருவர் தேற்றிக் கொண்டோம்—ஏதோ ஒரு புது நம்பிக்கையோடு! சில சமயங்களில் தனியாக பாடினோம். 'எதைப்பற்றி எவ்வாறோ பாடினோம். எங்களுக்கு தோன்றிய முறையில் பாடினோம். ஆனால் இவைகூட நாளாவட்டத்தில் சலித்துவிட்டன. எங்கள் குரல்களை கேட்க எங்களுக்கே சகிக்கவில்லை. அவை சிறைச் சுவர்களில் செய்யும் எதிரொலி...அவை எங்களுடையது போலவே இல்லை.

*

மூவரில் நான் மூத்தவன்.

கடைசி சகோதரனை நாங்கள் மிகவும் விரும்பினோம். ஏனெனில் எங்கள் தாயின் கண்கள் அவனுக்கு இருந்தன. ஆகாயத்தைப்போன்ற நீல நிற கண்கள்...தாயின் கண்களிலிருந்த அன்பும் கனிவும் கொண்ட அதே கண்கள்...மணிப்புறாவின் கண்களைப்போல வசீகரமான கண்கள்...

பகலைப்போல அழகானவன் அவன். பார்க்க முடியாத அருவத்தின் பகலைப்போல...கோடை கழியும் வரை உள்ள அஸ்தமனத்தைப்போல... குளிரால் உருக்கப்பட்ட பனிக்கட்டியைப் போல... அவன் தூய்மையாகவும் பளப்பளப்பாகவும் இருப்பான்.

பிறர் துன்பத்தைக் கண்டால் அவன் கண்களில் நீர்ததும்பும். நெஞ்சை விம்மும் அந்த துன்பத்தை துடைக்காதவரை அவனுக்கு நிம்மதி பிறக்காது.

*

அடுத்த சகோதரனின் உடலும் உள்ளமும் உறுதியானவை. அவை பிறந்த மண்ணுக்காக தத்தம் செய்யப்பட்டவை—சுதந்திரத்துக்காக ரத்தச் சேற்றில் பயணம் செய்தவை—புன்னகையோடு இன்னல்களை வரவேற்றவை.

ஆனால் சிறையை அவன் விரும்பவில்லை. மலைகளில் வேட்டையாடுபவன் அவன். மானையும் ஓநாயையும் துரத்தியவன். ஒவ்வொரு வினாடியையும் வீணாக்காதவன். அதனால் சிறைச்சாலையில் அசையாமல் கிடப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. கால்களைப் பிணைத்திருந்த விலங்குகள் அவனுக்கு நோய்களிலேயே மிகவும் மோசமான நோய்போல.

விலங்கு பூட்டப்பட்டு அடைந்து கிடக்க நேரிட்டதால் அவனது உணர்ச்சிகள் உலர்ந்தன.

*

சிறைச் சுவர்களுக்குப் பக்கத்தில் லெமான் ஏரி இருந்தது. ஆயிரம் அடிகளுக்கு கீழே அதன் தண்ணீர் சலசலத்தது. சில்லான் சிறைக் கோட்டையின் மேல்தளத்தைச் சுற்றி ஏரியின் அலைகள் மோதின.

உயிருள்ள கல்லறைபோல, ஏரியின் மேற்பரப்புக்குக் கீழே நாங்களிருந்த பாதாளச்சிறை இருந்தது. இரவும் பகலும் நாங்கள் அலைஓசையைக் கேட்டோம். எங்களுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்ட வெளியுலகின் செய்திகளை—பிறந்த பூமியின் செய்திகளை—அந்த அலைஓசைகள் எங்களுக்கு சொல்லின.

சிறைச் சுவர்களைப் பொத்துக்கொண்டு ஏரி நீர் வந்துவிட்டால்...இந்நினைவு எனக்கு அதிர்ச்சி தரவில்லை, சிரித்தேன்! ஏனெனில் சாவு என்னை சுதந்திரமுள்ளவனாக்கும் என்பதால்.

*

எனது சகோதரன் வேதனையைச் சொன்

னேன். உறுதியான அவன் இதயம் உளுத்துவருவதையும் சொன்னேன். உணவை வெறுத்தான்—ஒதுக்கிவைத்தான்.

மலையிலுள்ள ஆட்டின் பாலை அருந்துவான். ஆனால் இங்கோ அகழி நீரே தரப்பட்டது. ரொட்டி கைதியின் கண்ணீரைப் போல இருந்தது—ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டவை போலிருந்தன அந்த ரொட்டித் துண்டுகள்.

இவையெல்லாங்கூட அவன் உணர்ச்சிகளை மழுக்கவில்லை. மலையுச்சியில் தவழும் காற்றை சுவாசிக்கும் உரிமை மறுக்கப்பட்டதுதான் அவனை கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சியது.

ஏன் உண்மையை தாமதப்படுத்தவேண்டும்? அவன் இறந்தான், அதை நான் பார்த்தேன். அவன் தலையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவனது செத்த உடலைக்கூட தொட முடியவில்லை ஏனெனில் விலங்குகள் என்னை தூணோடு பிணைத்திருந்தன.

அவர்கள் இறந்த அவன் உடலை தூக்கிக் கொண்டு போனார்கள். அவனை என்னருகே கொண்டுவரும்படி அவர்களிடம் வேண்டினேன். ஆனால் அவர்கள் சிரித்தார்கள்!

உயரே உள்ள அந்த பூமியில்...நாங்கள் காதலித்த அந்த பூமியில்...அவனுக்கு சிலை செய்யப்படும்!

*

கடைசி சகோதரன்...அழகான கண்கள் படைத்தவன்...

அவன் பிறந்தபோது வெளிறிய பூவைப் போலிருந்தான். தாயின் சாயல் அவனிடம் இருந்தது. நாயகத்துக்காக இறந்த தந்தையின் எண்ணங்கள் அவனிடம் இருந்தன.

அவனுக்காக என் வாழ்வை பணயம் வைக்க தயாராக இருந்தேன். ஆனால் அதனால் எந்த பலனுமில்லை, ஏனெனில் அவன் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்துகொண்டே வந்தான். கடைசியில் நாட்டை காதலித்தவர்களுக்கு ஏற்பட்ட கதிதான் அவனுக்கும் ஏற்பட்டது. சாவு சுதந்திர விரும்பிகளின் ஒரே துணைவன்!

அமைதியாக கண்ணீரின் சாயலின்றி, ஆனால் உணர்ச்சித் துடிப்போடு அவன் மறைந்தான். முணுமுணுப்பில்லை—ஒரு புலம்பல் இல்லை.

அவனது கருவிழிகளில் மின்னலின் ஒளி மிதந்தது. அது இருண்ட சிறையை ஒளியுலகாக்கிற்று. ஆனால் அந்த ஒளி கடைசியில் மறைந்துவிட்டது—

அவனைத் தொட எனக்கு அனுமதி கிடைத்தது, ஆசையோடு அவன் கைகளைப் பிடித்தேன். ஓ! என் கைகளும் சில்லிட்டிருக்கின்றன, ஆனால் இன்னும் நான் உயிரோடிருக்கிறேன். அதை மட்டும் உணர்கிறேன்.

நாங்கள் எதைக் காதலித்தோம் என்பதை நாங்கள் அறிந்தபோது உருவான ஒரு புது உணர்ச்சி அப்படியே இருக்கவில்லை.

அது ஏன் என்று புரியவில்லை!

என்னால் சாகவும் முடியவில்லை—வாழவும் முடியவில்லை. இரண்டுக்குமிடையே தொங்குகிறேன்.

வாழும் நம்பிக்கை எனக்கில்லை—ஆனால் சாவில் மட்டும் நம்பிக்கை இருக்கிறது.

*

அதற்குப் பின் என்ன நடந்தது! முழுமையாக என்னால் உணர முடியவில்லை. எப்போதுமே உணர முடியவில்லை.

முதலில் ஒளியின் சிறப்பு வந்தது, அதைத் தொடர்ந்து காற்றின் சிறப்பு வந்தது. பின் இருள் வந்தது.

எனக்கு எந்த எண்ணமுமில்லை—அவையெல்லாம் சில்விட்டுவிட்டன. எனக்கே சொந்தமான கனவுகள்—அவைகூட எங்கோ காணாமற்போய் விட்டன. எனக்கு என்ன தெரியுமென்றே தெரியவில்லை.

கற்களுக்கிடையே நானும் ஒரு கல்லாய் நின்றேன்.

மழைத்துளிகளுக்கிடையே உள்ள மரங்களில்லாத மலைக்கொடரைப் போல எல்லாமே வெறிச்சிட்டு நிறமின்றி வெளுத்துக் காணப்பட்டன.

அது இரவுமல்ல—பகலுமல்ல. அது சிறை விளக்கின் ஒளிகூட அல்ல. கனத்த என் பார்வைக்கு அது வெறுப்பாக இருந்தது.

வானமில்லை. அங்கே நட்சத்திரமில்லை. பூமி இல்லை—அங்கே காற்று இல்லை. காலமில்லை—அங்கே மாறுதலில்லை, நன்மை இல்லை—குற்றமும் இல்லை.

ஆனால் நிலைத்த மூச்சு இருந்தது, இதயம் லேசாக அடித்துக்கொண்டிருந்தது.

சூன்யம் பார்வையில் கடலாக விரிந்து கிடந்தது.

*

எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது. இனிமையான குரல்! அந்தக் குரல்...பறவை ஒன்றின் மகிழ்ச்சிக் குரல்...நின்று நின்று கேட்டது. என் கண்கள் சுழன்றன.

சூரிய ஒளியின் பிரதிபிம்பம் பாம்புபோல அறையில் நழுவி வருவதைப் பார்த்தேன். அது வரும் துவாரம் வழியாக அந்தப் பறவை மரக்கிளை ஒன்றில் அமர்ந்திருப்பதைப் பார்த்தேன். அழகான பறவை! புதிய இறக்கைகளோடு! அதன் பாட்டு ஆயிரமாயிரம் விஷயங்களைச் சொல்லியது, அவைகளையெல்லாம் எனக்காகவே சொல்வது போலிருந்தது.

அந்த பறவையை இதற்கு முன் எங்காவது பார்த்திருக்கிறேனா? அது இறந்துபோன கடைசி சகோதரனின் ஆத்மாவா! சிறையின் இருளில் அழுங்கிக்கிடக்கும் என்னை அது காதலிக்க வந்ததா! எனது சிறைக் கூண்டை உடைக்கவா அது தனது சிறைக் கூண்டை உடைத்துவந்தது?

அழகிய பறவையே! நான் அதை விரும்ப

11-ம் பக்கம் பார்க்க

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோழு அச்சகம் 16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை 1.